போன் நெ. 15. விலை 2 அணா. REGD No. 4642

# திராவிடநாடு

மலர் 13 | 8–5–55 | இதழ் 44

# காலம் மாறிவிட்டது கதறிப் பயனில்லை

[ அண்ணாதுரை ]

விசாரம், யாரைத்தான் விட்டு வைக்கிறது! விழி குளமாகி, விலா எலும்பு நொருங்கிக் கிடக்கும் பாட்டாளிக்கு மட்டுந்தானா விசாரம்—பல்லக்குச்சவாரி, பால் பழம் பரமான்னம், பாதகாணிக்கை, விருதுகள், எல்லாம் இருக்கும் ஜெகத் குருவுக்குக்கூட விசாரம்!! ஏன் இருக்கப்போகிறது—இல்லாதவன், இடுப்பொடிந்தவன், இவர்களுக்கு விசாரம் இருக்கலாம், இவருக்கு என்னய்யா விசாரம், கூப்பிட்ட குரலுக்கு, அடியேன் தாசானுதாசன் என்று பணிவுடன் கூறிக்கொண்டு, மேல் வேட்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு வந்து நின்று, காலால் இடும் வேலையைத் தலையால் செய்து முடிக்கிறேன் என்று கூறிடும் பக்தர்குழாம் இருக்க, யானைகுதிரை ஒட்டகம், பலவண்டிகள், பலவகை வாத்தியங்கள் இருக்க, இவருக்கு விசாரம் எதன் பொருட்டு வரப்போகிறது என்று கேட்கத் தோன்றும்! உண்மையிலேயே அந்த உத்தமர் விசாரப் படுகிறார்! ஆற்றுவார் இல்லை, தேற்றுவார் இல்லை, ஐயனே! என்று உருகிக்கொண்டிருக்கிறார்!! எதன் பொருட்டு? என்ன விசாரம்? என்கிறீர்கள். ஜெகத் குரு சங்கராச்சாரி ஸ்வாமிகளின் விசாரத்துக்குக் காரணம் மகா ராஜாக்கள், ராஜாக்கள், ஜெமீன் தார்கள், மிட்டா மிராசுதாரர்கள் என்போர் மறைந்துவிட்டார்கள் என்பதாம். அதனால் தாங்கொணாத சோகம் கொண்டவராய், விழியில் நீர்ததும்ப, உடல் பதற உள்ளம் வாட, கேட்போர் கல்மனம் படைத்தோரானாலும் பாகாய் உருகும் விதமாக, "ஏ! பரந்தாமா! இப்படியும் ஒரு சோதனையை வைக்கலாமா!! சீமான்களையும், சிற்றரசர்களையும், கோலாகலப் பிரபுக்களையும் கோலோச்சும் குபேரர்களையும், கண்டு, பரமானந்தம் கொண்டு, அவர்களைச் சீடர்களாக்கிக் கொண்டு, தங்கப்பாதக் குறடு என்ன, தங்கத்தால் செய்யப்பட்ட பல்லக்கு என்ன, முன்னோடும் சிப்பாய்கள், பின்னே வரும் பரிவாரம், மாடமாளிகை கூட கோபுரம், நவரத்னம் எல்லாம் காணிக்கையாகப் பெற்று, வாழ்ந்து வந்த வைபோகத்துக்குப் பேராபத்தை வைத்துவிட்டாயே! ஏ! பிரபோ! என் சொல்லை வேதமாகக்கொண்டு ஒழுகிவந்த உத்தம பக்தர்களிடம் இருந்து வந்த ராஜ்யங்களை, சுய ராஜ்யம் என்ற பெயரால் பறித்துக் கொண்டு விட்டார்களே, இனி என் பக்தகோடிகளிடம் நான் 'பவுனபிஷேகம்' பெறமுடியுமா. ஏ! லட்சுமீ புத்திரர்காள்!" என்று அன்போடு நான் அழைக்க, "எல்லாம் தங்கள் திருக்கடாட்ச மேன்மைதான் ஸ்வாமீ!" என்று அவர்கள் பயபக்தியுடன் கூற, "இன்ன கைங்கரியத்தைச் செய்யவேண்டுமே" என்று நான் கூற "கட்டளையிடுங்கள், தாசன் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று அவர்கள் கூற, இவ்வண்ணம் இன்பமாக நடந்துகொண்டிருந்த பரிபாலனத்துக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டதே—ராஜாக்கள், ஜமீன்தார்கள், மிட்டா மிராசுதாரர்கள், பிரபுக்கள் இனி நமது சமூகத்திலே இருக்க இடம் காணோமே—என்னமோ சமதர்மம் என்கிறார்கள், ஏன் இப்படி ஒரு பித்தம் பிறந்ததோ தெரியவில்லை! ஆபத்பாந்தவா! பிரபுக்களின் ஆதரவால்தானே, தேசத்திலே தேவாலயங்களும் மடாலயங்களும், இவ்வளவு விமரிசையாக ஏற்பட்டன! குருமார்கள், வேதப்பிராமணாள், சத்புருஷாள்,

ஆகியவர்களை ஆதரிப்பது ஆண்டவனுடைய அனுக்ரஹத்தைநிச்சயமாகப் பெறுகிற மார்க்கமாகும் என்ற நம்பிக்கையுடன், பிரபுக்கள் தந்த மான்யங்கள் எவ்வளவு, காணிக்கை எவ்வளவு! இனி யாரிடம் கேட்பது? யார் தருவார்? தடாகத்திலேநீர் வரண்டுபோனால், தாமரை எப்படி மலரும்! சூரியன் மறைந்துபோனால் வெளிச்சம் ஏது? விழி பழுதாகிப்போனால், பார்வை ஏது! ஜெமீன்தாரர்களும். மிட்டாமிராசுதாரர்களும், சிமான்களும், இல்லாமற்போனால் மதம் ஏது, மதத் தலைவர்கள் ஏது! ஏ! கருணாமூர்த்தி! இப்படி ஒரு கஷ்ட காலத்தை ஏற்படுத்திவிட்டாயே! இனி எங்கள் கதி என்ன!!–என்று பிரலாபித்த வண்ணம் ஜெகத்குரு சங்கராச்சாரியார் சின்னாட்களுக்கு முன்பு ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

பஞ்சாங்கம் எழுதிப் பிழைக்கவேண்டிய சுபாவத்தை கொண்டவர்களிடம் பத்திரிகைகள் சிக்கிக் கொண்டிருப்பதால், அவைகளிலே ஜெகத்குருவின் கதறல் கண்ணைப் பறிக்கும் வகையில் வெளியாகி இருக்கிறது — கண்டிருப்பீர்கள்.

பூகம்பம், பீகார், அசாம் ஆகிய இடங்களிலே ஏற்பட்டு நாடே அல்லோல கல்லோலப் பட்டது— வீடுகள் மண்மேடுகளாயின— வயல்கள் வெடிப்புகளாயின,— ஆறுகள் திசைபுரண்டன—ஆடு மாடுகள் பூச்சிப் புழுப்போல அழிந்தன, மக்கள், மாண்டனர். பல கோடி ரூபாய் பொருள் நஷ்டம்! கண்ணுருவிக் காட்சிகள்! கர்ணகடூரமான சேதிகள்!—ஜெகத்குரு சங்கராச்சாரிய ஸ்வாமிகள் உடல் பதறி உள்ளம்வெதும்பி இப்போது பதைப்பது போலப் பதை பதைத்து, அறிக்கை வெளியிடவில்லை!

தீ விபத்து!
பெரு வெள்ளம்!
கடும் பஞ்சம்!
கொலை கொள்ளை கொடுமை!
வகுப்புக் கலகம்!

இவைகளின்போதெல்லாம் உருகாத மனம், பதறாத உடல், ஜெமீன் முறையும் பிரபுக்களின் அந்தஸ்தும் ஒழிகிறது என்ற உடன், என்ன பாடுபடுகிறது பார்த்தீர்களா! துக்கம் தொண்டையை அடைத்துக்கொள்கிறது!!

துப்பாக்கிப் பிரயோகம் — பத்து பேர் மாண்டனர்.

தடியடி–நாற்பது பேருக்குப் படுகாயம்.

ரயில் விபத்து—நூறுபேர் மாண்டனர்.

விமானம் வெடித்தது — அறுபது பேர் பிணமாயினர்.

இவ்விதமான செய்திகள் வருகின்றன—மக்கள் பதைபதைத்து, ஐயோ! பாபம்! பரிதாபம்! என்று கூறுகிறார்கள்.

ஜெகத்குரு, அப்போதெல்லாம், கேவலம் லோக மாயையில் நமக்கென்ன 'ஸ்ரத்தை'என்று இருந்துவிடுகிறார்.

ஒரு துளி அனுதாபம் – ஒரு சொட்டுக் கண்ணீர்—ஒரு சிறு நல்லுரை, வெளிவருவதில்லை.

ஜெமீன்முறை ஒழிகிறது, பிரபுக்களின் ஆதிக்கமும் இனிச் செல்லாது என்ற உடன், பாருங்கள், கங்கையாகிவிடுகிறது கண்கள், 'ஸ்ரீ முகம்' பறக்கிறது. உள்ளம் கொதிக்கிறது!

ஏழை எளியவர்களை ஈடேற்ற, அவர்களுக்கு நல்வாழ்வு கிடைக்கச் செய்ய, மதம் இல்லை.

ஏழைகளின் உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கும் உல்லாச புருஷர்கள், ஊர்க் குடி கெடுத்து உப்பரிகை அமைத்துக்கொள்வோர், எளியோரை வாட்டிடும் வல்லூறுகள், இவர்களின் சார்பாக வாதாட, ஆதரவு தேடவே, மதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஏழையின் பெருமூச்சு, மாளிகைவாசியின் செவியிலே விழாதபடி தடுக்கவே மதம் பாடுபடுகிறது.

நல்வினை தீவினை, கொடுத்து வைத்தவன், ஆண்டவன்சோதனை ஐயன் கட்டளை, அவன் ஆணை —என்றபேச்செல்லாம், உழைத்து உருக்குலைந்து போகும் உத்தமர்களை, எத்தர்களிடம் சிக்கிச் சீரழிய வைக்கும் சதிச் செயலுக்குச் சன்மானம் பெறும், தரகர்களின் கற்பனைகள்.

ஒழுக்கம், உயர் பண்பு, இரக்கம், ஈகை — என்றெல்லாம் ஒவ்வோர் சமயம் பேசுவது, வெறும் பகட்டு.

அக்ரமம் அரண்மனையில் பிறந்தால், வாயடைத்துக் கிடப்பர்.

அநீதி செய்வோன், 'அஷ்ட ஐஸ்வரியம்' படைத்தவனானால், அடிபணிவர்.

மாளிகையிலே மதுக்குடம் இருக்கும் — கண்டிக்கத் துணிவு பிறக்காது!

மங்கையரின் கற்பு சூறையாடப்படும் — கண்களை பொத்திக்கொள்வர்!

ஏழை இம்சிக்கப்படுவான்—ஏதுமறியாதவர்போலிருந்துவிடுவர்.

இந்தப் போக்குக்கு சன்மானம் தரப்படும்—மான்யம், மடம், கோபுரம், திருக்குளம், தேர் திருவிழா, அபிஷேகம், ஆராதனை, பல்லக்கு, பாத காணிக்கை இத்யாதி இத்யாதி.

மதத்தின் விளைவு இதுதான்— ஏடுகளிலே தத்துவங்கள் இருக்கலாம் ஏராளமாக. அவைகளுக்கு விசேஷ விளக்கம் அளிப்போரின் பேச்சிலே தேனின் இனிமை இருக்கலாம், ஆனால் நடைமுறையில், இன்று நேற்றல்ல, நீண்டகாலமாகக் காணக் கிடப்பது—ஏழை இம்சிக்கப்படுவதும், பிரபுக்கள் ஆசிர்வதிக்கப்படுவதுமாகிய கொடுமை தான்!

எனவேதான், ஏழையின் கண்ணீரை, எளியோரின் வியர்வையை, இம்சைக்கு ஆளானோரின் இரத்தத்தைக் கண்டபோது பதறாத மனம், பிரபுக்களின் எதிர்காலம் பாழ்படும் என்று தெரிந்ததும், பதறுகிறது — கண்ணைக் கசக்கிக் கொள்கிறார் ஜெகத்குரு — கைகளைப் பிசைந்துகொள்கிறார்!

மதம், எவ்விதமான மனப்பான்மையை குருபீடங்களுக்குத் தந்துவிட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள்.

குப்பையைக் கிளறும் பேர்வழிகளின் போக்கு கிடக்கட்டும், இதோ ஜெகத்குருவின் போக்கு இருக்கிறது–பாருங்கள்!

பிரபுக்கள் இல்லையென்றால் மதம் இல்லையாம்!

என்ன அழகான வாதம், கவனித்தீர்களா!

மதம் என்றால், பஞ்சமா பாதகத்தைத் தலைகாட்டவிடாமல் செய்து, பகவானின் அருளைப் பெறுவதற்கான வழிவகை கண்டறிவது, என்கிறார்கள்.

இதற்குப் பிரபுக்கள் ஏன்?

உண்மையைச் சொல்லுவதானால், பிரபுக்களின் பொழுதுபோக்கே, பஞ்சமா பாதகம்!!

மதத்தின் மேம்பாட்டினைக் காண வேண்டும் என்ற தூய எண்ணம் உள்ளபடி 'லவலேசமாவது' இருக்குமானால், பஞ்சமாபாதகங்களின் இருப்பிடங்களாக, நீண்டகாலமாக இருந்துவரும், 'குகைகளை' அழித்திடும் காலம் இப்போதாவது வந்ததே என்றெண்ணி மகிழ்வர்! ஜெகத்குருவே, ஆயா

சப்படுகிறார், மதம் மாய்ந்துபடுமோ என்று சோகிக்கிறார். ஏன்? அவரும் அவர் போன்றாரும், மதம் என்று கருதுவதும், மற்றவர்களைக் கருதும்படிச் சொல்வதும், தாளச் சத்தம் மேளச் சத்தம், அதிர் வேட்டுச்சத்தம், இவைகளைத்தாம். இவைகளுக்குப் பணம் தேவை ஏராளமாக — இதைத் தாராளமாகத் தரக்கூடியவர்கள் தனவான்கள் — எனவே தனவான்கள் அழிந்துபட்டால் மதம் நாசமாகிவிடும் என்று கதறுகிறார்கள்! பேதைமை! பேதைமை!! பெரிய இடமானால் என்ன, பேதைமைதான், நிச்சயமாக.

ஒரு ஊசி போட்டுக்கொண்டால் போதுமாம்—காலரா ஒழிந்தேபோகிறது—என்கிறான் மருத்துவன்.

ஐயயோ! அப்படியா! காலராவா ஒழிந்துபோகிறது — பிறகு, சுடுகாடு என்ன கதியாவது—என்கிறான் வெட்டியான்.

உண்மையில் வெட்டியான் இவ்விதம் பேசமாட்டான்—அவனுக்கு வேதம் தெரியாது, உபநிஷத்தெரியாது, துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்றால் புரியாது, ஆனால் அவனுக்கு இதயம் இருக்கிறது, எனவே, மக்களை மாளவைக்கும் காலரா ஒழியவேண்டும் என்று எண்ணுவானே தவிர, சுடலையில் தனக்கு வேலைகுறைந்துபடுமே என்று எண்ணமாட்டான்!!

மதத்தைக் கட்டிக் காக்க வேண்டும் என்ற எண்ணம் கொள்ளுமுன் இந்த மகானுபாவர்கள், ஒன்றைத் தெளிவாக, திட்டமாக, ஒளிவு மறைவு இன்றி, உள்ளொன்று புறமொன்று என்றில்லாமல், இருபொருள் மறைபொருள் என்ற போக்கின்றி கூறவேண்டும், மதம் யாருக்காக? எதற்காக—என்பதை.

மதம்—மக்களுக்காக— அவர்தம் நல்வாழ்வுக்காக — அந்த நல்வாழ்வுக்குத் தேவையான நற்பண்பு வளர—என்றால், அக்ரமும் அநீதியும், எங்கு தலைகாட்டினாலும், நாலு அடுக்குமாடியானாலும், நாலுவேதம் கற்றவன் வீடானாலும், கோபுரம் கட்டியவன் மாளிகையானாலும் ஆளும் கட்சியின் கொடிதாங்கியின் கூடமானாலும, வைரக் கடுக்கன் மின்னிடும் சீமானானாலும், அவனைப் பம்பரமாக்கிடும் சீமாட்டியின் இல்லமானாலும், எங்கு அக்ரமம் தெரிந்தாலும் கண்டிக்க முன்வர வேண்டும்,

**வருகிறார்களா? வருவார்களா? வந்தால் பீடம் நிலைக்குமா?**

அவ்விதம் வரக் கூடியவர்களானால், ஏன், ஜெமீன்தாரனும் மிட்டாதாரனும் இனி இருக்க மாட்டார்களாமே என்று அழப் போகிறார்கள்!

மதம், யாருக்காக என்பது வெட்ட வெளிச்சமாகிறது, ஜெகத்குருவின் அறிக்கையால்.

மற்ற மற்ற மதக்காரர்களுக்கு— இஸ்லாத்துக்கும், கிருஸ்தவத்துக்கும், ஆதரவு இருக்கிறதாம், பல அவதார மான்மியமும், அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் எனும் அற்புதமும் கொண்ட இவருடைய இந்து மதத்துக்குத்தான் ஆதரவு இல்லையாம் — ஆதரவு தந்துவந்த பிரபுக்களின் வாழ்வும் அஸ்தமிக்கிறதாம்.

மற்ற மற்ற மதக்காரர்களைப் பற்றிப் பேசுமுன், அச்சமும் கூச்சமும் ஏன் இவருக்கு ஏற்படவில்லை என்று கேட்கத் தோன்றுகிறது.

மற்ற மற்ற மதக்காரர்கள்—மக்களுக்கு மதம் பணியாற்றவேண்டும், மதி அளிக்கவேண்டும், வழி காட்டவேண்டும், இதம் தரவேண்டும், ஏற்றம் அளிக்க வேண்டும் என்று எண்ணி, திட்டமிட்டு அவ்வழியே காரியங்களைச் செய்கிறார்கள். கல்விக் கூடங்களையும் மருத்துவ மனைகளையும் ஏழையர் விடுதிகளையும், எளியோருக்கு வாழ்வளிக்கும் அமைப்புகளையும், மதத்தின் பெயரால் ஏற்படுத்தி மகிழ்கிறான், மகிழ்விக்கிறான், மனிதனைத் தேவனாக்குகிறேன் என்று வாக்களிக்கிறான்! இந்து மதம், கட்டிய கல்லூரிகள், மருத்துவ மனைகள் எத்தனை! விரலை மடக்க யோக்யதை உண்டா வெட்டிய குளங்கள் அனந்தம்! அதிலே மிதந்த விதவையின் இன்பப் பெருக்கு பலப்பல! ஏழைக்கு இதம் தரும் ஏற்பாடு எங்கே?

ஏன், இதுவரை, அந்தத் துறையிலே கண்செல்லவில்லை!

பிரபு காணிக்கை தருவான்— அந்தத் தகுதியைப் பெற ஆயிரம் குடிகளை அழித்திருப்பான்!

பிரபு தந்த காணிக்கை, கோயிலாகும், கோபுரமாகும், மதத்தலைவருக்குக் கொலு வீற்றிருக்கும் மண்டபமாகும்! அவன் தந்த காணிக்கையிலே தொக்கிக்கிடக்கும் 'பாபம்' யாருக்குத் தெரியாது! யார், கண்டிக்க முன்வந்தார்கள்,!

அமெரிக்காவிலிருக்கிறான் ஏசுவின் விசுவாசி—அவன் அள்ளித் தந்த பணம், அம்பாசமுத்திரத்தில் ஆஸ்பத்திரியாகிறது!

இங்கே 'இஷ்டவாகு பரம்பரை'க் காலமுதல் இருக்கிறது இந்துமதம் —கட்டிய மருத்துவ மனை எத்தனை —மடப்பள்ளிகள் ஏராளம்—கோயில் பிரசாதம் தயாரிக்கும் இடங்களைக் கூறுகிறோம்!

மதம்—மடாலயங்கள், ஜெகத்குருக்களின் பீடாலயங்கள் ஆகிய இடங்களிலிருந்துமட்டுமே பிறக்கக் கூடிய ஒளி என்று நம்பிவந்த காலம், மலையேறிவிட்டது.

சமூகத்தில், நீதியும் நேர்மையும் நிலைத்திருக்கத்தக்க வழிவகைகளைச் செம்மைப்படுத்தினால், மதம், மக்களின் இதயத்திலிருந்து கிளம்பும்.

மணி அடித்தாகவேண்டும், மார்கழித் திருநாள் வேண்டும், அர்த்தராத்திரிப் பூஜை, அதிர்வேட்டு விழா, இவைகள் இருந்தாகவேண்டும் என்பதில்லை. அன்பும் அறமும் அரசோச்ச, இத்தகைய ஆகாவழிகள் தேவையில்லை.

அன்பும் அறமும் சுரந்திடும் வகையில் சமூகத்தில் அறிவு பரப்பிடுதல் வேண்டும்—இதற்கு ஆண்டிக்கோலம்பூணத் தேவையில்லை— அதிலும் பல்லக்கில் பவனிவந்தபடி பவழபஸ்பமும் தங்கரேக்கும் சாப்பிடும் குருமார்கள் தேவையில்லை.

ஏழையை இம்சிக்கும் ஏற்பாடுகளைத் தகர்த்திடும் துணிவும், நீதிக்காகப் போராடும் நெஞ்சுஉரமும், அறியாமையை அழித்திடும் பழைமையைச் சாடிடும் வீரமும் படைத்து களம்புக அஞ்சாத கடமை வீரர்கள் தோன்றிப் பணியாற்றிடவேண்டும்.

அவர்கள் பிரபுக்களின் பவுன்களை அல்ல, நல்லோரின் இதயத்தைத்தான் பெரிதெனமதிப்பர்.

அவர்கள் குருபீடங்களை அல்ல, குடிசை வாழ்வோரைத் தேற்றுவதைத் 'தேவகாரியம்' என்று கொள்வர்.

அவர்கள் வளருகிறார்கள்!! வளர்ந்துகொண்டே இருக்கிறார்கள்! மேலும் வளருவார்கள் !.

அவர்களின் 'காலம்' இது— பிரபுக்களின் காலம் அல்ல!!

காலம் மாறிவிட்டது — கதறிப் பயனில்லை!!

★

திராவிடநாடு

காஞ்சி] 8—5—55 [ஞாயிறு

# அது போதாது

—o—

கப்பல் ஒன்று அனுப்பப்போகிறதாம், அமெரிக்கா! உலக முழுவதையும் சுற்றி வருமாம், அக்கப்பல். ஒவ்வொரு நாட்டிலும் நிறுத்தப்பட்டு, 'பாரீர் இக்கப்பலை! அமெரிக்கா கட்டிய கப்பல்! எண்ணெயில்லாமலே ஓடும். எரிபொருள் எதுவும் தேவையில்லை. எப்போதும் ஓடிக்கொண்டே இருக்கும்' என்று விளக்கப்படுமாம். அதோடுகூட, உலகத்தின்மீது அமெரிக்காவுக்குள்ள சிரத்தையும் செப்பப்படுமாம்.

செய்யப்படப்போகும் கப்பல் சாதாரணக் கப்பலல்ல! அணுக்கப்பல்!! அணுசக்திமூலம், இதுபோன்ற கப்பல்களையும் இயங்கச் செய்யலாம் என்பதற்கோர் எடுத்துக்காட்டாக இருக்குமாம்!

பேசுகிறார்களல்லவா, உலகில்—பித்தம் அதிகமாகி வருகிறது, அமெரிக்காவுக்கு, அணுகுண்டுகளைச் செய்து, அடிக்கடி பரிட்சை பார்த்துக் கொண்டே இருக்கிறது, அக்கிரமம்! மனித ஜாதியை, அழியச் செய்யத்தானா அணுசக்தி பயன்படவேண்டும், அதை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தக்கூடாதா-என்றெல்லாம். அப்படிப் பேசுவோருக்குப் பதிலளிக்கும் செயலாம், இக்கப்பல்! உலக சமாதானத்தின்மீது தங்களுக்குள்ள அக்கரையை, இந்த உன்னத முயற்சியின்மூலம், காட்டிக்கொள்ளப்போகிறதாம், அமெரிக்கா. ஐசனேவர் அறிவித்திருக்கிறார், கடந்த ஏப் 23ந்தேதி.

அகமகிழ்கிறோம்! அடாவடிச் செயல்களுக்கு மட்டுமே சிந்தையைச் செலவழித்துவரும் அமெரிக்காவுக்கு, இப்படியொரு சீரியசெயலைச் செய்து காட்டிடும் எண்ணம் பிறந்தமைக்காக. எனினும், கப்பல் கட்டி, அது செல்லுமிடமெங்கும் அமெரிக்காவின் புகழ்தேடி, மீண்டும் திரும்பிச் சென்றுவிடுவதால் மட்டும், உலக மக்கள் உற்சாகம் பெற்று விடமாட்டார்கள்! அவர்கள் எதிர்பார்ப்பது, நிரந்தரமான நல்லெண்ணம் பிறக்குமா, அமெரிக்காவுக்கு என்பதுதான். ஏனெனில் ஏழ்மையாகிப்போன நாடுகளிலெல்லாம் இன்று அமெரிக்கத் திருவிளையாடலால் ஏற்பட்ட அனர்த்தங்கள், அனந்தம்!

சமாதானக் கப்பல் வலம் வரும், அது அமெரிக்காவின் நல்லெண்ணப் புகழ்பாடும்—என்று ஐசன் அறிவித்த சில தினங்களுக்கெல்லாம், முன்னூறு பேர்களுக்குமேல், மாண்டிருக்கிறார்கள்! ஆயிரக்கணக்கான மக்கள், படுகாயம் அடைந்து, கிடக்கிறார்கள்!! அடித்துக்கொண்டேயிருக்கிறது, புயல் அனுதினமும், தென்வியட்நாம் பிரதேசத்தில். இந்தோசீனத்தின் தெற்கிலிருக்கும் பகுதி இது. வட பகுதியில், முற்போக்கு எண்ணம் கொண்ட ஹோசிமின்னின் வியட்மின் ஆட்சி நிலவுகிறது! அதற்கு அமெரிக்கா சூட்டியிருக்கும் பெயர், செங்கொடி ஆட்சி. நீண்டகாலமாக, ஏழ்மையும் இல்லாமையும் நெளியும் விதத்தில், பிரெஞ்சுக்காரர்களின் பிடியில் சிக்கிக் கிடந்த இந்தோசீனாவை விடுவிக்கத் தோன்றிய இயக்கமே, வியட்மின். ஆண்டு பலவாகப் போராடி, வெற்றிகளைக் குவித்தது! விளைவைத் தாங்க முடியாத காரணத்தால், அண்மையில், பிரெஞ்சு பிடி தளர்ந்து, அதன் காரணமாக இந்தோசீனா இரண்டாயிற்று. வடக்கில் வியட்மின் ஆட்சியும், தெற்கில் பாவோடாய் ஆட்சியும் உண்டாக்கப்பட்டது! பாவோடாய், பழைய மன்னர்! வடக்கே, மக்களாட்சி. தெற்கே, முடியாட்சி. ஆட்சி நடத்தவேண்டிய மன்னரோ, ஆண்டில் பதினொருமாதங்கள் வீற்றிருப்பது, பாரீஸ் பட்டிணத்தில்! அவரது பிரதிநிதிபோல, தெற்கு வியட்நாமில் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கும் பிரதமமந்திரியார், தீயெம் என்பவர். இவர் மூலம், தனது ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளலாமென்பது அமெரிக்காவின் திட்டம். அதனாலேயே, தீயெம் ஆட்சிக்குத் திரள் திரளான பண உதவிகளைச் செய்தும் உற்சாகமூட்டியும் வந்தது.

வடக்கிலிருக்கும் ஹோ-சி-மின் சர்க்காரோ, வெளியாருடைய உதவிக்காகக் காத்திருக்காமல், மக்களாட்சியின் மாண்பினைச் செயல்மூலம் காட்டி வருகிறது! அங்கே மலரும் நன்மைகளையும், இங்கே வளரும் வறுமையினையும் காணும் தென்வியட்நாம் குடிமக்களுக்கு, ஹோ-சி-மின் ஆட்சி மீதுதான் நல்லெண்ணம். வெளியில் சொன்னால் தண்டனை கிடைக்குமே என்ற அச்சத்தால், விழியில் சோகமும், மொழியில் கலக்கமும்கொண்டு அவதிப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்! அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து, நல்லெண்ணத்தைப் பெறவேண்டிய தீயெமோ—வெறும், வெத்து வேட்டுகள் மூலம், பதவிப் பீடத்தை நிரத்தரமாக்கிக் கொள்ளலாமென்று, நிலச் சீர்திருத்தம் போன்ற சில காரியங்களைச் செய்தார்! எதைச் செய்தென்ன—நாடோ, முடியாட்சியின் அடிப்படையில்— மக்கள் விரும்புவதோ மக்களாட்சி—தீயெம் போன்றாரோ, அமெரிக்காவின் ஆடும் பொம்மைகள். இதனால், அமெரிக்கா எதிர்பார்த்ததுபோல, வியட்மின்னை விட, வியட்நாம் ஆட்சி நல்ல பெயர் பெறமுடியவில்லை! வழக்கம் போன்ற, ஊழல், ஊதாரித்தனம்—இங்கே. இதனால், தீயெம், அரசாள இலாயக்கில்லை எனும் கருத்து அமெரிக்கா முழுவதும் பரவ ஆரம்பித்து, கடந்த சிலதினங்களாக அமெரிக்கஏடுகளில்தகவல்கள்வெளியாயின! அவைகளின் விளைவாக, இப்போது, தீயெம் தன்னுடைய திறமையைக் காட்டிக் கொள்ள ஆரம்பித்திருக்கிறார்!! விளைவுதான், புயல். முன்னூறு பேர், மரணம்; ஆயிரம் பேருக்குப் படுகாயம். "நாட்டிலிருக்கும் அராஜக வாதிகளை ஒழிப்பேன்!" என்றும் சங்கநாதம் செய்வது. நாட்டின் கிராமங்களோ, தீயெம் பக்கம் இல்லை! அவர்தம் சிந்தையெலாம், வடக்கே, ஹோசிமின்னிடம் இருக்கிறது!! தீயெமுக்கு ஏற்பட்டிருக்கும் திடீர் உணர்ச்சி கண்டு, இப்போது அமெரிக்காவுக்கு சிறிது அகமகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறதாம்—கம்யூனிசத்தைக் கொல்லும் காலன் ஒருவர் இருக்கிறார் நமக்கு எனும், எண்ணம் உண்டாகி விட்டதாம்.

இந்தச் செய்தியும் வருகிறது—சமாதானக் கப்பல் செய்திக்குப் பிறகு!!

இந்தோசீனா விடுதலை பெற்றது காலனி ஆட்சியிலிருந்து; இரண்டாயிற்று—ஒருபக்கத்தில் நமது தாசன், தீயெம்! கொரியாவிலும் நாட்டுப்பற்று உருவெடுத்தது; இரண்டாக்கினோம். ஒருபக்கத்தில், நமது எடுபிடி சிங்மேன்!! சிதைந்த சீனாவும் விடுதலை முழக்கம் எழுப்பி கிளர்ந்தெழுந்தது-விடுதலை கூடப் பெற்று விட்டது—எனினும், பார்மோசாவில் அதற்கு எதிராக ஒரு பொம்மையான சியாங்கேய்ஷேக்கை வைத்திருக்கிறோம்!—என்று கித்தாப்புப் பேசிக்கொள்ளக் கூடிய விதத்தில், எழுச்சி பெற்ற ஒவ்வொரு ஆசிய நாடுகளிலும், தன்பிடி இருக்கவேண்டுமென்பதில், அக்கரை காட்டுகிறது, அமெரிக்கா.

எழுச்சி பெற்றுப் புதுமை நடைபோடும் கட்சிக்கு அது சூட்டும் பெயர், கம்யூனிஸ்டுகள், என்பதாகும்! அதனால்தான், இந்தியாவின் அரசியல் விவகாரங்களை அலசும் அமெரிக்க நாடுகள் எல்லாம் தென்னாட்டிலுள்ள நம்மையும் கம்யூனிஸ்டுகள் என்றே குறிப்பிடுகின்றன!!

யாரார், புதுமைப் பாதையில் நடவாமல், பழைமைக்கும் புதுமைக்குமிடையில் அல்லாடுகிறார்களோ அவர்களை யெல்லாம் அழைத்து, போற்றி, தம் சகாவாக்கிக் கொள்வதில், ஆதி

(16-ம் பக்கம் பார்க்க)

# அரசியற் கருத்துக்கள்

**[ அன்று முதல் இன்று வரை ]**

[பேராசிரியர் இருதயராஜ்]

தன்னுடைய குடியேற்ற நாடுகளின் காரியங்களில் கூடப் பிரிட்டன் சுயநல நோக்கத்துடன் நடந்துகொண்டது. தனது குடியேற்ற நாடுகளான அமெரிக்கா போன்றவைகளில் விளைந்த சர்க்கரை, புகையிலை, பருத்தி, கோதுமை முதலிய பொருள்களை அவைகள் தாய்நாடான பிரிட்டனைத் தவிர யாருக்கும் விற்கக் கூடாது. பிரான்சு போன்ற நாடுகளுக்கு இந்தப் பொருள்கள் தேவைப்பட்டால் அவை பிரிட்டனிடமிருந்துதான் வாங்கிக்கொள்ள வேண்டும். இன்னும் குடியேற்ற நாடுகள் பிரிட்டனுக்கு அனுப்பும் சாமான்களை ஆங்கிலக் கப்பல்களிலேயே அனுப்பவேண்டும். இவ்வாறு பிரிட்டனின் தொழில், வாணிபம், கப்பற்றொழில் இவை வளரச் சட்டங்கள் செய்யப்பட்டன. இவை நியாயமற்றவை. குடியேற்ற நாடுகளின் நன்மையைச் சிறிதும் கவனியாமல் அவைகளை நசிக்க விட்டு, தாய் நாட்டின் வளத்தைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் செய்யப்பட்டவை. இந்த அநீதியைப் பொறுக்க முடியாமல் தவித்துக்கொண்டிருந்த அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் அரசியலிலும் அடிமைப் பட்டிருந்தார்கள். இந்த அடிமைத் தளையை அகற்ற அவர்கள் புரட்சி செய்து முடிவில் வெற்றிபெற்றனர்.

புரட்சிக் கருத்துக்கள் அரசியலில் பரவத்தொடங்கி, அதன் காரணமாகக் குடியேற்ற நாடுகளில் கிளர்ச்சிகள் தோன்றியதும், பிரிட்டன் பிரான்சு, ஸ்பெயின் போன்ற தாய் நாடுகள் தாங்கள் இதுவரை கடைப்பிடித்து வந்த 'மெர்கன்டிலிஸ்ட்' என்ற பொருளாதாரக் கொள்கையைக் கைவிடத் துவங்கினர்.

அத்துடன் லாக், ஹ்யூம்போன்ற அரசியல் அறிஞர்கள் தனி மனிதனின் சுதந்தரத்தைப் பற்றி வெளியிட்ட கருத்துக்களும் மக்களுடைய போக்கை மாற்ற உதவியது. பொருளாதாரத் துறையில் முன்னேற்றங் காணுவதற்காக அரசாங்கம் மக்களுடைய நடவடிக்கைகளில் தலையிடுவதும், எந்த நாட்டுடன் வியாபாரம் செய்வது, எந்தப் பொருளை வாங்குவது, எந்தப் பொருளை விற்பது என்றெல்லாம் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதும் மக்களுடைய சுதந்தரத்தைக் குறைப்பதாகும் என்று மக்கள் எண்ணத் தொடங்கினர். நாட்டின் நலத்திற்காகத் தனிமனிதனின்முக்கியத்துவத்தைக் குறைத்து அவனுடைய நலனை மறந்து சட்டங்கள் இயற்றுவது தவறென்று கருதப்பட்டது. மனிதன் தான் விரும்பிய தொழிலைச் செய்யவும் விருப்பப்படி வியாபாரம் செய்யவும் உரிமையுள்ளவன். அரசியலில் வெகுவாகப் போற்றப்பட்ட இயற்கை உரிமைகள் பொருளாதாரத் துறையிலும் மக்களுக்குக் கிடைக்கவேண்டும் என்ற எண்ணம் பரவிற்று.

இந்த இயற்கை உரிமைகளில் முக்கியமானது சொந்தச் சொத்துரிமை என்பது. இந்த உரிமையைக் காப்பாற்ற வேண்டியது அரசின் கடமை. ஒவ்வொரு மனிதனும் சொத்தைச் சேர்க்கவும் அதைப் பெருக்கவும் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடக்கூடாது.

இவ்வாறு கூறிய பொருளாதார அறிஞர்கள் அரசாங்கத்தின் கடமை, மக்கள் சுதந்தரத்தையும், சொத்தையும் பாதுகாப்பது ஒன்றேதான். அதைவிட்டு வேறெந்த அலுவலையும் அரசாங்கம் மேற்கொண்டால் அது தனி மனிதனின் உரிமைகளைப் பறிப்பதாகவே முடியும் என்று நம்பினார்கள்.

பதினெட்டாவது நூற்றாண்டின் துவக்கத்தில் இங்கிலாந்தில் பொருளாதாரத் துறையில் ஒரு மாபெரும் புரட்சி ஏற்பட்டது. நூல் நூற்பது, துணி நெய்வது போன்ற தொழில்களில் இயந்திரங்களைப் புகுத்தினார்கள். இந்த இயந்திரங்கள் முதலில் கையினால் இயக்கப்பட்டன. பிறகு ஆற்றின் நீர் வேகத்தையும், காற்றின் பலத்தையும் கொண்டு இந்த இயந்திரங்கள் வேலை செய்யப்பட்டன. இம்மாதிரி இயற்கையின் சக்தியை எப்பொழுதும் நம்பி வாழ்வதில் சிரமங்கள் இருந்தன. ஆற்றிலே நீர்வற்றலாம்; காற்று அடிக்காமற் போகலாம். இவைகளைத் தவிர்க்க நீர் ஆவியினால் இயந்திரங்களை ஓட்டுவதற்கு முற்பட்டார்கள். அதன்பின் ஆலைகள் தோன்றின. இதுவரை தொழிலாளர் தங்களுடைய வீடுகளிலேயே தாங்களே முதலாளியாக இருந்து தொழில் செய்து வந்தனர். ஆனால் இப்பொழுது நூற்றுக் கணக்கான தொழிலாளர் ஒரு முதலாளியின் கீழ் ஆலையில் வேலை பார்க்கும் நிலைமை ஏற்பட்டது.

இயந்திரங்கள் செய்ய இரும்பு தேவைப்பட்டது. சுரங்கங்களிலிருந்து இரும்பு எடுக்கப்பட்டது ஏராளமாக.

இரும்பை முதலிலெல்லாம் மரக்கரியை உபயோகித்து உருக்கி வந்தார்கள். மரக்கரி போதுமான அளவுக்குக் கிடைக்காததால் அத்தொழில் அபிவிருத்தியடையாமலிருந்தது. நிலக்கரியைக் கொண்டு இரும்பை உருக்கும் முறை உபயோகத்தில் வந்தது.

இரும்பினால் செய்வதிலிருந்து எஃகினால் இயந்திரங்கள் செய்யத் துவக்கினார்கள். இதற்கும் நிலக்கரி அதிகமாகத் தேவைப்பட்டது.

நீராவியை உண்டாக்குவதற்கும் நிலக்கரி உபயோகப்படுத்தப்பட்டது. இவ்வளவுக்கும் தேவையான நிலக்கரியை எடுப்பதற்கு சுரங்கங்கள் அதிகமாக வெட்டப்பட்டன.

இரும்புச் சுரங்கங்களிலும், நிலக்கரிச் சுரங்கங்களிலும் பல்லாயிரக் கணக்கானவர்கள் வேலையிலமர்த்தப்பட்டனர். இயந்திரங்கள் செய்யும் தொழிற்சாலைகளிலும் அப்படியே. மண்பாண்டங்கள் செய்தல் பீங்கான்கள் செய்தல் முதலிய தொழில்களெல்லாம் முன்னேற்றமடைந்தன. அவைகளிலும் எண்ணிறந்த தொழிலாளர் வேலைக்கமர்த்தப்பட்டனர்.

இவ்விதம் ஆலைகளில் இயந்திரங்களைக்கொண்டு தயாரிக்கப்பட்ட சாமான்களைத் துரிதமாகப் பல

இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும், இத்தொழில்களுக்கெல்லாம் வேண்டியமூலப்பொருள்களை, நிலக்கரியை வேகமாகக்கொண்டு செல்வதற்கும் போக்கு வரவு சாதனங்கள் தேவைப்பட்டன. இதுவரை இங்கிலாந்தில் மண் சாலைகளே உபயோகத்திலிருந்தன. சாமான்களைக் குதிரைகளின்மேல் ஏற்றி எடுத்துச் சென்றனர். சக்கரங்கள் பூட்டிய வண்டிகளில் கனமான பொருள்களை ஏற்றிச் சென்றால் சக்கரங்கள் மண்ணிலும் சகதியிலும் அடிக்கடி புதைந்து போவது வழக்கம். இம்மாதிரி சாலைகள் இனிப் பயன்படமாட்டா என்பது கண்டு, டெல்போர்ட், மெகாடம் என்ற எஞ்சினியர்கள் கெட்டியான சாலைகளைப் போடுவதற்கு வழி கண்டு பிடித்தனர். பிறகு நீராவியை உபயோகப்படுத்தி வண்டிகளை இழுத்துச் செல்லும் முறையைக் கையாண்டனர் இரயில் பாதைகள் போடப்பட்டன. இன்னும் ஆறுகளைக் கால்வாய்களின் மூலம் இணைத்துப் போக்குவரத்துப் பெருகச் செய்தார்கள். இதையொட்டி நீராவிக் கப்பல்களும் உபயோகத்துக்கு வந்தன. இவ்வசதிகள் பெருகிய பிறகு, தபால், தந்தி இவைபோன்ற வசதிகளும் ஏற்பட்டன.

இப்புரட்சிகரமான மாறுதல்களினால் ஏற்பட்ட விளைவுகள் சமூகத்துறையிலும் அரசியல் துறையிலும் புதிய கருத்துக்களைத் தோற்றுவித்தன.

குடிசைக் கைத்தொழில் முறை ஏற்பட்டதும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், ஆண், பெண், பிள்ளைகள் உள்பட ஆலைகளிலும், சுரங்கங்களிலும் வேலைக்கமர்த்தப்பட்டனர். முதலாளிகள் அவர்களைப் பதினைந்து, பதினாறு மணி நேரம் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தினர். போதிய கூலி தருவதில்லை. தொழிலாளருக்குக் குடியிருக்க வசதிகள் இன்றி அவர்கள் தெருக்களிலும் திண்ணைகளிலும், மர நிழலிலும் வாழ்ந்தனர் நகர்ப்புறங்களில். 1700ல் மக்கட் தொகை இங்கிலாந்தில் ஐம்பது லக்ஷமாயிருந்து 1804ல் தொண்ணூறு லக்ஷமாக வளர்ந்தது. 1850ல் 177 லக்ஷமாகப் பெருகியது. இவ்வளவு பெருக்கும், வீடு, உணவு, முதலிய தேவைகளை எப்படித் தேடித் தருவது என்ற பிரச்சனை எழும்பியது. இச்சமயத்தில் தோன்றிய மால்த்தஸ் என்ற பொருளாதார அறிஞர் மக்கட் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வாதாடினார்.

மக்கட் தொகை வளர்ச்சிக்குத் தக்க உணவுப் பொருள்களையும் பெருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதில் பலரும் முனைந்தனர். விவசாயிகள் தங்கள் நிலத்தில் ஒவ்வொருபகுதியை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை தரிசாகப் போட்டு வந்தார்கள். இப்பொழுது அம்முறை கைவிடப்பட்டுப் பழைய பயிர்களுடன் புதிய பயிர்களை மாற்றி மாற்றி விதைத்து நிலம் தரிசாகக் கிடப்பதைத் தவிர்த்தனர். சின்னஞ்சிறு துண்டு நிலங்களாக இருந்தவைகளை ஒன்று சேர்த்து அவற்றைப் பெரும விவசாயப் பண்ணைகளாக்கினர். அவற்றைச் சுற்றிலும் வேலியமைத்தனர். ஆடுமாடுகளைக் கொழுக்கவைத்துப் புதிய முறையில் கால் நடைகளை உற்பத்தி செய்து அபிவிருத்தி கண்டனர். பழைய உழவு முறைகளை விட்டுவிட்டு இயந்திரங்களைக்கொண்டு உழவும், களை எடுக்கவும், விதைக்கவும், அறுக்கவும், போரடிக்கவும் ஆரம்பித்தனர்.

இப்புதிய முறைகளைக் கையாளுவதற்கு மிகுந்த பணம் தேவைப்பட்டதனால் ஏழைகளாயிருந்த விவசாயிகள் அவைகளைக் கையாள முடியவில்லை. அதனால் அவர்களால் சிக்கனமாக உற்பத்தி செய்து பெரிய விவசாயிகளுடன் போட்டி விலைக்கு விற்கமுடியவில்லை. அந்தச் சமயத்தில் பெரிய விவசாயிகள் தங்கள் நிலத்தைப் பெருக்குவதற்கு நல்ல விலை கொடுத்து நிலங்களை வாங்கினார்கள். எனவே ஏழை விவசாயிகள் தங்களுடைய நிலங்களை விற்றுக் கடன்களை அடைத்துவிட்டு மிஞ்சிய பணத்தைக் கையிலெடுத்துக்கொண்டு குடும்பங்களுடன் கிராமத்தைவிட்டுச் சென்று நகர்ப்புறங்களில் குடியேறி ஆலைகளில் கூலிக்கமர்ந்தனர். அவர்கள் குடியேற்றம் நகர்ப்புறங்களில் நெருக்கடியை உண்டாக்கிற்று. சுகாதாரம் கெட்டது. நோய்கள் பரவின. எங்கும் துன்பமும் துயரமும் குடிகொண்டது.

தொழில், விவசாயத் துறைகளில் இங்கிலாந்தில் ஏற்பட்ட புரட்சியினால் நாட்டில் செல்வம் குவிந்தது என்னவோ உண்மை. ஆனால் மக்களின் துன்பம் வளர்ந்ததும் உண்மைதான்.

தொழில் துறையில் ஒரு சிலர் ஆலை முதலாளிகள், வியாபாரிகள் மேன்மேலும் பணக்காரரானார்கள். விவசாயத் துறையில் பெரிய விவசாயிகள் புது முறையினால் நிறைய உற்பத்திசெய்து நாட்டிலிருக்கும் உணவுத் தேவையைப் பயன்படுத்தி நல்ல விலைக்கு விற்றுப் பெரும் பணக்காரர்களானார்கள். அதே நேரத்தில் தொழில் துறையில் பெரும்பாலானோர் தினக் கூலிகளாக, போதிய உணவின்றி, உறைய இடமின்றி அல்லற் பட்டனர். அதுபோன்றே விவசாயத் துறையில் இயந்திர உபயோகத்தால் வேலையிலிருந்து தள்ளப்பட்டோரும், போட்டியிடச் சக்தியில்லாத ஏழை விவசாயிகளும் தொல்லைக்காளானார்கள்.

இந்தச் சமயத்தில் ஆதம் ஸ்மித் என்ற பொருளாதார நிபுணர் "மக்களின் செல்வம்" என்ற நூலை வெளியிட்டார். அதில் "சுயநலமே மனிதரை இயக்கும் சக்தி; மனிதருக்கு அவர்களிடமிருந்து பிரிக்க முடியாத இயற்கை உரிமைகள் உண்டு; அரசாங்கம் தொழில், வாணிபத் துறைகளில் தலையிடாமலிருப்பதே நல்லது; தொழில் முயற்சியே செல்வம் உண்டாவதற்குக்காரணம்" என்று எடுத்துக் காட்டினார். பகைவரிடமிருந்து பாதுகாப்பு, நாட்டில் அமைதியையும் நீதியையும் நிலைநாட்டுவது, பாதைகள், பள்ளிகள், முதலிய பொது மக்களுக்கான வசதிகளைச் செய்து தருவது; இவை அரசாங்கத்தின் அலுவல்கள். வியாபாரத்தில் தலையிடுவதினால் வெளிநாட்டுச் சரக்குகளுக்கு வரி விதிப்பது, இறக்குமதியைத் தடை செய்வது இது போன்ற காரியங்களைத்தான் செய்யலாம். தொழில் துறையில் தொழிலாளர்–முதலாளித் தவருறுகளைத் தீர்க்க முயற்சிப்பது—இதையும் செய்யலாம். வேறொன்றும் தனி மனிதன் உரிமையைப் பாதிக்குமாறு தடைகள் விதிக்கப்படக்கூடாது என்றார்,

(தொடரும்)

---

கடந்தவாரம் வெளிவந்த நமது மாவட்டச் செயலாளர்கள் பட்டியலில் திருச்சி மாவட்டம்—செயலாளர் தோழர் அம்பில் தர்மலிங்கம் என்பதைச் சேர்த்துக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

# காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே, தம்பி

தம்பி,

"கப்பலிலா போகப் போகிறீர்கள்—எந்தெந்தத் தேசம்—எவ்வளவு நாளாகும் திரும்பிவர—மாநில மாநாடு நடைபெறவேண்டுமே"—என்றெல்லாம் கேட்டிருக்கிறாய்,—கனிவு ததும்பும் கடிதமூலம். தினத்தந்தியிடம்மட்டும் சொல்லிவிட்டா நான் வெளிநாடு பயணமாவேன்—உன்னிடம் கூறுமலா—என் உள்ளத்துக்கு மகிழ்வும் நம்பிக்கையும் ஊட்டும் தம்பிமார்களின் 'அனுமதி' பெறுமல், வெளிநாடு போகத்தான் முடியுமா!

ஆமாம்—வெளிநாடுகளுக்குப் போய்வருவது என்பது என்ன எளிதான காரியமென்று எண்ணுகிருய்—பத்திரிகைகளில் தலைப்புப் போடுவதும், படம் போடுவதும் எளிது—பாஸ்போர்ட் கிடைப்பது அவ்வளவு எளிது என்று எண்ணுகிருய்! நான், அவ்வளவு சுலபத்தில் பாஸ்போர்ட் கிடைத்துவிடும் என்று எண்ணவில்லை. வேண்டுமானல், அடுத்த பொதுத்தேர்தலுக்கு ஒரு மாதத்துக்கு முன்பு 'பாஸ்போர்ட்' கேட்டால், கிடைக்கக்கூடும்! பிறகு? பணம் வேண்டும்! பாஸ்போர்ட்போலவே தானே அதுவும்.

"அண்ணு! இப்படியா கூறுவது, நாங்கள் இருக்கிறேம்" என்று அடுத்த கடிதத்தில் எழுதிட எண்ணுவாய்—ஆனல், முதலில் பணம் திரட்டு தம்பி, என் வெளிநாட்டுப் பயணத்துக்காக அல்ல, மாநில மாநாட்டுக்கு!

ரூபாய் இருபத்து ஐயாயிரம் தேவை!

ஒரு ஆயிரம்மட்டுமே தரப்பட்டிருக்கிறது—இந்த இலட்சணத்தில், பொருளாளர் என்று பட்டம் தரப்பட்டுவிட்டிருக்கிறது.

நான் வெளிநாட்டுக்குப் போவது என்பது இப்போதைக்கு இல்லை—இருபத்து ஐயாயிரம் சேர்த்து—இரண்டாவது மாநில மாநாட்டைச் சிறப்புற நடத்திவிட்டு, பொதுத்தேர்தல் குறித்துக் கலந்தாலோசித்து, பணியாற்றிவிட்டு—பிறகே வெளிநாடு—இடையில் சிறைக்குள் தள்ளப்படாமலிருந்தால்!!

எனவே, நடைபெறவேண்டிய காரியத்தைக் குறித்து, நண்பர்களுடன் நன்கு கலந்தாலோசித்துக் காரியமாற்று; நான் போகும் கப்பல் தினத்தந்தியில் படமாக வரும்—வேடிக்கையாகப் பார்த்துக்கொள்ளலாம்!

நடைபெற்றுகிவிட்ட பிறகு, சர்வசாதாரணமாகத் தோன்றும்; ஆனல், சிறிது எண்ணிப் பார்த்தால்தான், நாம், எவ்வளவு அருமையான 'கட்டம்' வந்திருக்கிறேம் என்பது விளங்கும்.

நாவலர் நெடுஞ்செழியன், இப்போது நமக்குப் பொதுச்செயலாளர்!

தஞ்சையிலும் மதுரையிலும் நான், பொதுச்செயலாளர் பதவிக்கு வேறு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்திய போது, புயலே கிளம்பிற்று—எனக்குச் சிறிது சிற்றம்கூடப் பிறந்தது. ஆனல் மெள்ளமெள்ள ஆனல்வெற்றிகரமாகச்சபலத்தைக் கடந்துவிட்டோம், கழகம் புதியதோர் கட்டம் வந்து சேர்ந்திருக்கிறது—நாம் வலுவும் பொலிவும் கொண்டதோர் அமைப்பு பெற்றிருக்கிறேம் என்கிற நம்பிக்கை நமக்கெல்லாம் ஏற்பட்டுவிட்டது—பெருமைக்குரிய செய்தி.

தோழர் நெடுஞ்செழியன் இந்தப் பொறுப்பை ஏற்கவேண்டும் என்பது இரண்டாண்டுக் காலமாகவே என் உள்ளத்திலே வளர்ந்த வண்ணம் இருந்த எண்ணம், ஓராண்டுக்கு முன்பு இலங்கை 'சுதந்திரன்' ஆசிரியர் சென்னை வந்திருந்தபோது, அவரிடம் கூறினேன்—அவர் தமது இதழில் வெளியிட்டிருந்தார்.

நான்மட்டுமல்ல, நமது கழகத்திலே பெரும்பாலானவர்கள புதிய பொதுச்செயலாளராகத் தோழர் நெடுஞ்செழியன் வரவேண்டும் என்ற எண்ணத்தைப் பெற்றனர்.

இந்த எண்ணம் எனக்குத் தோன்றிய நாள் தொட்டு நான் தோழர் நெடுஞ்செழியனை இந்தப் பொறுப்புக்குப் பக்குவப்படுத்துவதாக எண்ணிக்கொண்டு, அவருடைய இல்லத்தை என் இருப்பிடமாக்கிக்கொண்டேன்! சிறிதளவு, என்னிடம், பழகுவதில் கூச்சமுள்ள சுபாவம் அவருக்கு—எனவே, அவருடைய இல்லத்தை இருப்பிடமாக்கிக் கொண்டால்தான், என் எண்ணங்கள், நான் சரியென்று கருதும் முறைகள், என் ஆசைகள், எனக்குள்ள அச்சங்கள், இவைபற்றியும், துணைக்கழகங்கள், துளைக்கும் கழகங்கள், தூதுவிடும் கழகங்கள், வம்புக்கு இழுக்கும் கழகங்கள் ஆகியவை பற்றி என் கருத்து யாது என்பது பற்றியும், உரையாடி உரையாடி எடுத்துக்காட்ட முடியும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு, அவர் வீட்டுச் 'சைவத்தை'த் தாங்கிக்கொண்டிருந்தேன்!!

அவரிடம் நேரடியாகக்கூட பிரச்னைகளைப்பற்றிப் பேசுவதில்லை—பிரச்னைகளை நான் மற்ற நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்கும் போது அவர் உடன் இருப்பார்! மிக முக்கியமான கட்டங்களின் போது, புன்னகையாவது பிறக்கும், புருவத்தையாவது நெறிப்பார். இவ்வண்ணம் இரண்டாண்டுகள். துவக்கத்திலே நான் கொண்ட

நம்பிக்கை, வளர்ந்து, கனியாகி விட்டது. நமது கழகத்தை அதன் கண்ணியம் கெடாதவகையில் மட்டுமல்ல, வளரும் வகையில், நமது புதிய பொதுச்செயலாளர் நடத்திச் செல்வார் என்ற உறுதியை என்னால் நிச்சயமாக அனைவருக்கும் அளிக்க முடியும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலேதான் நான் நெடுஞ்செழியனைக் கண்டது.

உங்களில் பலரும் பார்த்திருப்பீர்கள்—நல்லவேளை அவருடைய துணைவியார் கண்டதில்லை என்று எண்ணுகிறேன் — தாடியுடன் நெடுஞ்செழியனை!

அப்போது, தோழர் அன்பழகன் தீவிரமாகக் கட்சிப் பணியாற்றிவருபவர் — தோழர் நெடுஞ்செழியன் தானுண்டு தன் படிப்புண்டு என்று இருக்கும் போக்கினராகத் தோற்றமளித்துவந்தார். நான் அப்போது தோழர் அன்பழகன், கல்லூரியில் இருந்து வெளி ஏறியதும் கழகத்தில் வந்து சேருவார், தோழர் நெடுஞ்செழியன், எங்காவது கல்லூரியில் கம்பனின் கவித்திறமைபற்றி (கட்டாயத்தாலும்) இளங்கோ அடிகள்பற்றி (விருப்பத்துடனும்) எடுத்துரைத்துக்கொண்டு தமிழின் எழிலைக் கண்டும் காட்டியும் பணியாற்றி வருவார் என்றே எண்ணிக்கொண்டேன். அதுபோல நடந்திருக்கக் கூடாதா என்று ஆயாசத்துடன் கேட்கும் அவர் துணைவியார் தெரிகிறார்கள்!! என்ன செய்யலாம்! அவரோ புயலில் குதித்து விட்டார்!!

தமிழ் எப்படி எப்படிப் பேசுவதற்குரியது, இலக்கியம் பேச்சுடன் கலந்து வரும்போது எத்தகைய இன்பமளிக்கும் என்றெல்லாம் நான் பன்முறை எண்ணிப் பார்த்ததுண்டு — மனதிலே உருவெடுத்துக் கொண்டிருந்த ஆசை நடமாடக் கண்டேன், தோழர் நெடுஞ்செழியன், கழக மேடையில் பேசத் தொடங்கியதும்.

கருவூர் ஆற்று மணலில் —நினைவிருக்கிறது — பெரியாரும் இருந்தார்—தோழர் நெடுஞ்செழியன் இலக்கியத்தை இனிய முறையிலே எடுத்தளித்தார். நல்ல விருந்து— ஆயினும் என்ன செய்வது, நாளாவட்டத்தில், தரத்தைச் சிறிதளவு தளர்த்தச் சொல்லி வற்புறுத்த வேண்டித்தான் வந்தது. தரத்தை வளரச்செய்யும் போக்கிலா ஆள வந்தார்கள் நம்மை விட்டுவைக்கிறார்கள்!!

நடை இருக்கட்டும், நண்பரின் திறம் இருக்கிறதே, அது கண்டு நான் வியப்புறுகிறேன்.

என்னிடம் இல்லாத — நான் விரும்பாததால் அல்ல, இயலாததால்—ஒரு அருங்குணம் அவரிடம் உண்டு — கண்டிருப்பீர்கள். **ஓயாது உழைப்பது! எப்போதும் எங்கேயும் எதையாவது, எப்படியாவது செய்துகொண்டே இருப்பது.** என்னாலே இதைக் கண்டு இரசிக்க முடியும்— ஆனால் என்னை அங்கிலைக்கு மாற்றிக்கொள்ள இயலவில்லை. நான் அடிக்கடி கனவு காண்கிறேன், சோலையில் சொகுசாக உலவுவது போல அல்ல—அந்தக்காலம் மலை ஏறிவிட்டது — பொதுப் பிரச்னைகளைப்பற்றி. தோழர் நெடுஞ்செழியன், எப்போதும் காரியமாற்றிக் கொண்டே இருக்கும் இயல்பினர். நேரம் வீணாகிவிட்டது என்று கூறத்தக்க போக்கிலே, அவர் இருந்ததை நான் கண்டதே இல்லை. இந்த இயல்பு, கழகத்துக்குப் பெருந் துணையளிக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை. வீட்டிலே என் குறும்புப் பார்வையைக் கண்டு தளருவார், எனினும் இயல்பு அவரைவிடாது, மறுகணம், ஏதாவது வேலையைத் துவக்கிக்கொள்வார்.

சிறையில் மூன்று திங்கள் இருவரும் ஒரே அறையில் தங்கி இருந்தோம் — அங்கு என்னவென்று கருதுகிறீர்கள்—ஆச்சாரியார் ராஜிநாமாச் செய்வதுபோல, அவசரச் சட்டம் பிறப்பிப்பதுபோல, பாதுகாப்புக் கைதியாக ஆக்கப்படுவதைப்போல, பெரியார் கட்டித் தழுவிக்கொள்வதுபோல, இப்படிப் பலப் பல 'கனவுகள்'—விழித்தபடி — நான் கண்டுகொண்டிருப்பேன். அவர்? — வேலை! வேலை! வேலை! ஏதாவது செய்தபடி இருப்பார்.

இந்த அருங்குணத்தை நாம் நன்றாகப் பயன்படுத்தி, கழகத்தை மேன்மையுறச் செய்துகொள்ள வேண்டும்.

என்னிடம் சில குறைபாடுகள் உண்டு—குறைபாடுகள் என்று சம்பிரதாய முறையில் சொல்கிறேன் —அதிலே ஒன்றுதான் கனவு காண்பது, மற்றொன்று மிகக் கஷ்டமான நெருக்கடியின்போதும் சர்வசாதாரணமாக அதனைக் கருதிக்கொண்டு சிரித்துக் கிடப்பது. இதிலே எனக்குச் சரியான 'ஜோடி' சம்பத்துதான்! பெரியாரின் 'சர்டிபிகேட்டே' உண்டு இதற்கு.

திருச்சியிலே திராவிடர் கழக மாநில மாநாடு — அதற்காக வேலை செய்வதற்காக ஒரு மாளிகையில் தங்கி இருக்கிறோம், நானும் சம்பத்தும்—பெரியார் வேலை செய்கிறார்—விசாரப்படுகிறார்—தொல்லைப் படுகிறார். நானும் சம்பத்தும் மாடியில் ஏதேதோ பேசுகிறோம், சிரிக்கிறோம், பாடுகிறோம் (யாரும் கேட்க மாட்டார்கள் என்ற தைரியத்தில்) கவலையற்று! பெரியாருக்குக் கோபம் பொங்கி வழிந்தது! எப்படிப்பட்ட சமயம்! இந்த இரண்டு பசங்களும் சிரித்துக்கொண்டு இருக்கிறார்களே! துளியாவது கவலை இருக்கிறதா? ஒரு பெரிய மாநாடு நடக்கவேண்டும், அதுபற்றித் துளியும் கவலைப்படாமல், தின்பதும் திரிவதும், ஆடுவதும் பாடுவதும், செச்சே!—என்று பேசினார். அப்போது நான் செல்லப்பிள்ளை! இகழப்பட்டபோதும் பழிக்கப்படும் போதும், அன்புகாட்டவேண்டியவர்கள் பகைக்கும்போதும், சிரித்துச் சோகத்தைச் சிதறடிப்பது என் முறை—மிகச் சிறியவனாக இருந்தது முதலே சம்பத்துக்கும் இது முறை. 'விளையாட்டுப் பிள்ளைகள்' என்று இதனைக்கொண்டு பெரியார் கூறுவதுண்டு. அதற்கும் நாங்கள் இருவரும் சிரித்தோம். அவரால் சகிக்கவேமுடியவில்லை. எனவே, டிக்கட் விற்பனை என்ற ஏற்பாட்டின்படி, சம்பத்தைக் கரூருக்கே அனுப்பிவிட்டார்!

சிரிக்கத் தெரியாமலிருந்தால் எனக்குப் பொதுவாழ்க்கையிலே ஏற்பட்ட சங்கடங்களால், பைத்யமே பிடித்துவிட்டிருக்கும். விளையாட்டுத்தனமல்ல அது—விசாரத்திலே மூழ்கிக் குழப்பமடைந்து போகாமலிருக்க, அது தகுந்த முறையாக அமைந்திருந்தது.

குறைபாடுகள் என்று இவைகளைக் கருதலாம் — விவரம் கூறப்படா முன்பு.

தோழர் நெடுஞ்செழியனைப் பெரியார், தமது மேற்பார்வையில் வைத்திருந்து பார்த்தார்—அவரால், யார்மீதும் குற்றம் காணமுடியும்— ஆனால், தோழர் நெடுஞ்செழியனிடம், அவராலும் ஒருகுறைகூடக்

கண்டறிந்து கூற இயலவில்லை. அத்தகைய பணியாளர் நமக்குக் கிடைத்திருக்கிறார்.

அவருக்குக் கிடைத்திருக்கும் கழகமோ, சாமான்யமானதல்ல!

ஆயிரத்துக்கு மேற்பட்ட கிளைகள்!

இடைவிடாத பொதுமக்கள் தொடர்புகொண்ட இயக்கம்.

களம் கண்ட காளைகள், தியாகத் தழும்பேற்ற தீரர்கள், கண்ணியத்தைக் காப்பாற்றும் பண்பினர் எண்ணற்றவர்கள்.

விழியில் நீர்வழிய வீதியில் விரட்டப்பட்டோம்—இன்று நமக்கென்று ஒரு தலைமை நிலையம், நம்முடையது என்று பெருமையுடன் கூறிக்கொள்ளத்தக்க ஒரு அச்சகம், நாம் செய்தோம் என்று மகிழ்ச்சியுடன் பேசிக்கொள்ளத்தக்க செயல் பட்டியல்—இவைகளைப் பெறுகிறார் தோழர் நெடுஞ்செழியன்—பன்மடங்கு இந்த வனப்பை, வலுவை, அதிகமாக்கிக் காட்டப்போகிறார்.

நமக்கென்று ஒரு தலைமை நிலையம், என்றேன்—மகிழ்கிறீர்கள்—நானே, அந்த இடத்தில் சிலபகுதி கலனாகி வருவதையும், ஆகவே கட்டிடம் புதுப்பிக்கப்படவேண்டிய அவசியத்தையும் அதற்கான செலவினையும் எண்ணிக் கவலைப்படுகிறேன். தோழர் நெடுஞ்செழியனை, அந்த இடத்திலே அழைத்துக்கொண்டு போய் அமர்த்திவிட்டோம். அவருடைய 'நாட்களில்' நிலையம் புதிய உருவும் எழிலும் பெறவேண்டும்—அதற்கான வசதியை நாம் அவரிடம் தேடித்தரவேண்டும்.

நமக்கென்று ஒரு அச்சகம் என்று பெருமையுடன் பேசுகிறோம்—ஆனால் நான் எவ்வளவு முயன்றும் 'நம் நாடு' பெரிதாகிவிடவில்லை, அந்தப்பொறுப்பும், அவரிடம், இப்போது. அதற்கான ஆதரவு திரட்டி அவரிடம் ஒப்படைக்க வேண்டியது, நமது கடமை.

மாநில மாநாடு! மிகப்பெரிய பொறுப்பு, நம்மை எல்லாம் அறை கூவி அழைக்கிறது. அதற்கான முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டு நமது பொதுச் செயலாளருக்கு நாம் துணைநிற்கவேண்டும்.

இவைகளையும் இவைபோன்ற வேறு பல கடமைகளையும் நாம் நிறைவேற்றிக் கொடுத்தால்தான் நமது புதிய பொதுச் செயலாளர் மூலம் நமது கழகம் பெறவேண்டிய புதிய பொலிவுக்கும் வலுவுக்கும் வழி செய்தவர்களாவோம்.

நேற்றுத்தான், கண்ணீருடன் வெளிவந்ததுபோல இருக்கிறது.

இதற்குள் என்னென்ன கட்டங்கள்!! எவ்வளவு எதிர்ப்புகளைத் தாண்டி, இந்தக் கட்டம் வந்திருக்கிறோம்!!

இதுகளாவது—கட்சி நடத்துவதாவது — என்ற ஏளனம் ஈட்டிபோலக் குத்திற்று, இதோ, இரண்டாவது பொதுச் செயலாளர்—இரண்டாவது மாநில மாநாடு!!

இதுகளாவது ஒன்று கூடி வாழுவதாவது—என்ற சாபம் மிரட்டிற்று!

ஒன்றுகூடி வாழ்வது மட்டுமா—ஒருவரை நம்பி ஒருவர் வாழக் கற்றுக்கொண்டோம் — தனி மனிதர்களைவிட ஒரு அமைப்பே முக்கியம் என்ற தத்துவம், நடைமுறைக்கு வந்துவிட்டது. வளர்ச்சி சாதாரணமானதல்ல!!

ஏ! அப்பா! பாரேன், இதுகளுக்குள் மூண்டுவிடப்போகிற வம்பு வல்லடிகளை, போட்டி பொறாமைகளை, பூசல் ஏசல்களை என்று கருவினர் — இதோ ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்து உடனிருந்து பணியாற்றுகிறோம், புதிய பொதுச் செயலாளருடன்.

தம்பி! நான் இந்த மகிழ்ச்சியிலே திளைத்திருக்கிறேன், வெளிநாடு போகும் திட்டம் பற்றி எண்ணிக்கொண்டில்லை.

ஒரு திங்கள் ஓய்வுகொடு—பிறகு மாநிலமாநாட்டுக்கு நிதி திரட்டி வைத்துக்கொண்டு, எந்தப் பட்டிதொட்டிக்கு வேண்டுமானாலும் கூப்பிடு, வருகிறேன்.

ஓய்வு எடுத்துக்கொண்டு உல்லாச வாழ்வு நடத்தவா, உள்ளத்திலே ஓராயிரம் ஈட்டிகள் குத்துவதுபோல, மாற்றார் நடந்துகொண்டதைச் சகித்துக்கொண்டும் தாங்கிக்கொண்டும், கழகத்தை அமைத்து, இந்த கவர்ச்சிகரமான கட்டத்துக்கு வந்திருப்பது! கழகம் பணியாற்றவேண்டிய துறைகள் பல உள—வெளிநாடு சென்று தெரிந்துகொண்டு வந்து பணியாற்றவேண்டிய கட்டம் இது அல்ல—இப்போது உள்ள கட்டம், நமது நாட்டை முழுவதும் நாம் பார்த்துப் பாடம் பெறும் கட்டம். அந்தக் கட்டத்தில், நாம் ஆற்ற வேண்டிய பணிகள்பற்றி உன் சீரிய யோசனையைக் கூறுவதுடன் —சிறிதளவு பணமும் சேர்த்துத் தரவேண்டுகிறேன்—மாநில மாநாட்டுக்கு. புதிய கட்டம், புதிய பொதுச் செயலாளர், அவர் தலைமையில் இரண்டாவது மாநில மாநாடு — அதைச் சிறப்புற நடத்தித் தருவதிலேதான், கழகத்தின் மற்றோர் கட்டம் மலர இருக்கிறது.

அணிவகுத்து நின்று, நாம் நமது கடமையைச் செய்யவேண்டும். சில்லரைத் தகராறுகளைச் சிரித்து விரட்டுங்கள் — பெரிய இலட்சியத்துக்குப் பாடுபடுகிறோம் என்ற எண்ணம், கொழுந்துவிட்டெரியட்டும்.

புதிய பொதுச்செயலாளரின் திறத்தையும் அருங்குணத்தையும் கழகம் முழுவதும் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமானால், நாம் ஒவ்வொருவரும் நமது கடமையைத் தவறாமல் செய்துமுடிக்கவேண்டும். முயற்சி எடுக்கவேண்டுமென்றுமட்டுமே கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், தம்பி! முயற்சி எடுத்தால் போதும், முடித்தே காட்டுவீர்கள் என்பதை அனுபவத்தில் கண்டவனல்லவா நான், அதனால்தான்.

சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டிலே கூடியதுபோல, குறைந்தது இரட்டிப்பு மடங்கு மக்கள் கூடுவர், திருச்சியில்—நடுநாயகமல்லவா, அதனால்.

அவ்வளவு பெரிய மாநாட்டை நடத்திக் கொடுக்கும் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள நேரத்தில், காகிதக் கப்பலின் மீது கவனம் செலுத்தலாகாது; மாநாட்டுக்கான யோசனைகளை நண்பர்களுடன் கலந்து பேசி, தலைமை நிலையத்துக்குத் தெரியப்படுத்து. மாநில மாநாட்டிலே கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினைகளை இப்போதிருந்தே உள்ளூர் கிளைக்கழகத்தில் கலந்து பேசுங்கள்—திட்டம் தயாரித்து அனுப்புங்கள்—தம்பி!—பணமும் அனுப்பு!

அன்புள்ள,

**அண்ணாதுரை.**

* முக்கிய குறிப்பு:-

அண்ணாதுரை
பொருளாளர்
தி. மு. க. மாநிலமாநாடு

# “புண்ய பாக்கியம்”

“என்ன செய்வேன்? எனக்கும் என் கணவருக்கும் குழந்தைகளே இல்லையே! இருவரும் நரகத்துக்குத்தானே போகவேண்டி நேரும். அப்படி நினைக்கும்போது, எங்களால் தாங்கமுடியவில்லையே. வேண்டாத ஆண்டவர்கள் இல்லை. சென்று வராத தீர்த்தயாத்திரைகள் கிடையாது. இருவரும் கோத்ராடனங்களும் செய்தோம். இறைவன் திருவுள்ளம் இரங்கவில்லை. ஒரு புழு, பூச்சிகூட இல்லை. புலம்பித் தவிக்கிறோம்”—என்று தேவம்மா யாராரிடம் சொல்லி அழுதாளோ, தெரியவில்லை. அக்கம்பக்கத்திலிருப்போர், ஆண்டிகள், தீராத வினைகளைத் தீர்த்துவைக்கும் சாமியாடிகள், இப்படி ஒவ்வொருவரிடமும் நிச்சயம் தன் உள்ளக் குமுறலைக் கூறியிருக்கத்தான் வேண்டும். அவர்கள் காட்டிய வழிகளும், சொல்லிய யோசனைகளும், சிந்தாகூலத்தைப் போக்காத காரணத்தால், தேவம்மா, தேடித் துருவ ஆரம்பித்திருக்கிறாள் நமது பழைய புராணங்களை. புராணங்களைக் கேட்டாலும் தீருமாமே, பாபம். படித்தால் கிடைக்குமாமே பரகதி! —அப்படிப்பட்ட புராணங்களில், ஏதாவது ஒன்றில், பிள்ளைப் பிறப்பதற்கு வழி இருக்காதா என்று தேடித் தேடி அலைந்திருக்கிறாள், தேவம்மா. கிடைத்தது, ஒரு நூல்! அதுதான் ‘புண்ய பாக்கியம்’!

* * *

‘திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமானே! சித்தம் இரங்கலாகாதா, உனக்கு. தேசத்துக்கு ராணி நான். அரண்மனை, ஆளம்பு, தங்கக் கட்டில், வைரக் கெண்டி, தாலாட்டத் தாதியர், தவழ ஒரு பெரிய நாடு—இத்தனையும் இருக்கிறது. ஆனால், எங்கள் மனம் மகிழ்விக்க ஒரு குழந்தை இல்லையே, கோமானே! குறைதீர்க்கமாட்டாயா? வேண்டியோர்க்கெல்லாம் வரமருளும் பித்தா! பிறைசூடி! பிள்ளைப் பித்து பிடித்து அலைகிறோமே நானும், நாட்டையாளும் அரசரான என் கணவரும். தங்கத்தால் தேர் செய்து படைக்கவா? வெள்ளிக் கோபுரம் கட்டவா? வைரமுடிகள் செய்துவைக்கவா? என்ன செய்ய வேண்டும் ஈசா! என்ன செய்தால் உன் கருணை எனக்குக் கிட்டும்?”, இவ்விதம், சிவபெருமானின் சிலையைக் கட்டிக்கொண்டு, அழுது அழுது காலத்தைப் போக்கினாள், அந்த அரசி. பக்தையின் குரல் கேட்ட பரமனும் திருவுள்ளம் இரங்கி, ஒருநாள் தேசத்து ராணிமுன் தோன்றினார்!

“பக்தாய்! வேண்டும் வரம் கேள் ……”

“ஒரு பிள்ளைக் கனியமுது பெம்மானே! ஒன்றே ஒன்று”

“ஒன்றென்ன, ஏழு தருகிறேன்”

“பாக்கியசாலி நான் தேவா”

“ஆனால், ஒரு நிபந்தனை…”

“சித்தம், தேவதேவா”

“செய்தால்தான் குழந்தைகள் கிடைக்கும்”

“எது செய்யவேண்டுமானாலும் செய்யத் தயாராயிருக்கிறேன், தயாநிதே!”

பக்தை, ‘எதற்கும் தயார்’ என்று தெரிவித்ததைக் கேட்ட ஈசன், என்ன தெரிவித்திருப்பார்? எம்பெருமானாயிற்றே! கல்லினுள் தேரைக்கும், கருப்பையில் உயிருக்கும், நல்லுணவே தந்து ஆதரவளிக்கும் நாதனாயிற்றே! இந்தா போ — என்னுடைய பெயரைச் சொல்லி, ஏழைகள் எண்ணாயிரம் பேருக்கு உணவு கொடு—இல்லாதவர்களைத் தேடிப் பிடித்து அரச பொக்கிஷத்தை அள்ளிக் கொடு—கூனும் குருடுமாய்த் திரியும் குழந்தைச் செல்வங்களுக்கு இருக்க இடமும் புசிக்க உணவும் வழங்கச் செய் உன் கணவனை—என்றுதானே, கேட்டிருக்கவேண்டும்! கேட்பாரா, நமது ஈசன்! காலிலே, ஒரு அசுரன்—கையிலே திரிசூலம்—போட்டிருப்பதே புலித்தோல்—ஆபரணமோ பாம்பு—குடியிருப்பதாகக் கூறப்படும் இடமோ, சுடுகாடு—இப்படிப்பட்ட ‘கலியாண குணங்களுக் கேற்பத்தானே’ நினைவும் இருக்கும்! அதனால் அப்படியெல்லாம் கேட்கவில்லை—அரசியின் கையில் சிவலிங்கம் ஒன்றைக் கொடுத்தாராம் — பெண்ணே! இதை, அதோ தெரியும் மாமரத்துக்கடியில் வைத்து பூஜி. அந்த மாமரத்துக்குப் பக்கத்திலிருக்கும், இன்னொரு மாமரத்திலிருந்து ஏழு கனிகளைப் பறித்து, சிவலிங்கத்துக்கு முன்பு வை. யாருடைய துணையைக் கொண்டாவது, உன் தலையை வெட்டி, காவுகொடு. ஏழு கனிகளிலிருந்தும், ஏழு குழந்தைகள் தோன்றுவர்!—என்றாராம்.

* * *

“புண்யபாக்கியம்” இதுதான். இந்தப் புராணத்தைப் படித்தாள் தேவம்மா—கடைசியில், பக்தையின் பக்தியை மெச்சி ரிடபவாகனரூடராய் பார்வதி சமேதரை எம்பிரான் காட்சிதந்து அவளைத் தனது பாதகமலங்களில் சேர்த்துக் கொண்டார், என்று முடிந்திருக்கிறதல்லவா, புராணம்—அதையும் படித்திருக்கிறாள்! பிள்ளை பிறக்க வழியிருக்கிறதா என அறியப் புராணத்தைத் துருவியவளுடைய மனம், அந்தப் புராண எழுத்துக்களையும், பொன்னெழுத்துக்கள் என்றுதானே எண்ணியிருக்கும்? அதனால், ‘புண்ய பாக்கியம்’ சொல்லுவது போலவே, செய்து பார்த்திடலானாள்! ஏழு மாங்கனி சிவலிங்கம்—மாமரம்—அருகே, உயிரற்ற அவளுடைய தலை—பக்கத்தில், புண்ணிய பாக்கிய நூல் இத்தனையும் இருந்ததைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் போலீசார். பூனாவுக்கு அருகில் 20-மைல் தொலைவிலுள்ள, ஒரு காட்டில். ஈசன் என்னப்பன் வந்து எந்த வரமும் அளித்ததாகத் தெரியவில்லை! தேவம்மாவுக்கு சொந்த ஊர், தெலுங்குநாடாம். நூலும், தெலுங்கில், தீட்டப்பட்டதாம். போலீசார், புலன்விசாரணை செய்துகொண்டிருப்பதாகச் செய்தி கூறுகிறது!!

★

### முகவரி மாற்றம்

—:-:—

தோழர் சிற்றரசு திருச்சியிலிருந்து தன் அலுவலகத்தைச் சென்னைக்கு மாற்றிக்கொண்டார். இனி அஞ்சல் எழுதும் நண்பர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதவும்.

சி. பி. சிற்றரசு,
நெ-31, தையப்ப முதலி தெரு,
மண்ணடி சென்னை-1




பிரான்சு அரச குடும்பத்திலும், பிரபு குடும்பங்களிலும், தர்மகாரியத்துக்கென்று அவரவர்களின் நிலைமைக்கு ஏற்ற அளவு தொகை ஒதுக்கித்தரப்படும்—இந்தத் தொகையைத், தக்க முறையில் பகிர்ந்தளிப்பதற்குத் 'தர்மாதிகாரி' நியமிக்கப்படுவதுண்டு.

ரிஷ்லுவுக்கு அந்தவேலை கிடைத்தது. சாதாரணமான வேலைதான்—அரசியல் அதிகாரம் கொண்டதல்ல—ஏழை எவர், எளியவர் யார், விதவையின் அழுகுரல் எங்கு கேட்கிறது, எந்தத் தேவாலயத்தில் அலங்கார விளக்கு இல்லை என்பன போன்றவைகளை அறிந்து, ராணி ஆன் வசம் உள்ள தர்ம பணத்தை, தரம் பார்த்துத் தருகிற வேலைதான்! உண்டிப் பெட்டிக்கு அதிகாரி, ஊராளும் வேலை அல்ல. ஆண்டுக்கு ஆறுயிரம் பவுன் சம்பளம்!

இது அல்ல, ரிஷ்லு எதிர்பார்த்தது, எனினும் "இதுவா என் திறமைக்கு ஏற்றது" என்று வெறுத்துத் தள்ளிவிடவில்லை. அரண்மனையில் நடமாடலாம்—அனைவரையும் கவனிக்கலாம், ராணி ஆன்மனமறியலாம், மன்னனையும் சந்திக்கலாம், அரசியல் சம்பவங்கள் சுழன்றுகொண்டிருக்கும் இடத்தில் இருக்கலாம்—சமயம் கிடைக்கும் என்று எண்ணி, தர்மாதிகாரி வேலையை இசைந்து ஏற்றுக்கொண்டான்.

அரண்மனையிலோ, சூழ்ச்சியும் சதியும் நிழலுருவில் காணப்பட்டன. மேரியின் அச்சம் அதிகரித்தது—லூனிசுக்கு மன்னன் மீதிருந்த பிடி, பலப்பட்டது. கண்ணீர் பொழிந்தாள் மேரி; அந்தக் கயவனை விட்டு விலகடா கண்மணீ! என்று கெஞ்சினுள்—நீ, கான்சினியை விரட்டு! என்று லூயி கூறவில்லை, ஆனல் மனதிலே அது தான் எண்ணம். "அன்னையே! பாசம் மறையுமா! யார் என்னுடன் தோழமை கொண்டாலும், தாயின் மனம் நோக நடந்துகொள்வேனே" என்று பேசினனே தவிர, லூனிசை விரட்டவில்லை மன்னன். மேரியின் மனம் முறியலாயிற்று.

கிடைத்த சலுகை போதாது என்ற கோபத்தால், காண்டிபிரபு, மீண்டும் தன் கோட்டையிலே புகுந்துகொண்டு, பகை கக்கிக் கொண்டிருந்தான்.

அரசிளங்குமரி ஆன், கொஞ்சு மொழி பேச, நானிருக்கும் போது, பறவை உலகிலே பொழுது போக்கும் மன்னன், மரக் கட்டையா, மதியற்றவனு, அல்லது மாபாவி லூனிஸ் போடும் மாயப் பொடியில் மயக்குற்று விட்டானு, என்று எண்ணி எண்ணி ஏங்கிக்கிடந்தாள். அரண்மனையில் வாழ்ந்தாள்—இளமையும் எழிலும் கொண்டவள்—பட்டுப் பட்டாடை, அணிபணி அலங்காரம், சேடிகள், கீதமிசைப்போர், கிண்கிணி அணிந்தோர், பானமளிப்போர், பரதம் அறிந்தோர் எனும் விதவிதமான பரிவாரம் இருந்தது—கணவன் காதலிக்கவில்லை—கல்லுருவிலும் இல்லை, காமாந்தகாரனுகவுமில்லை, தடிதாங்கியவனுமல்ல, இளைஞன், ஒத்த வயதினன், எனினும் அவன் தன்னை நாடுவதில்லை, காதல் ஒளி அவன் கண்களிலே தெரிவதில்லை, தனி அறையில் தோழன் லூனிசுடன், என்ன மர்மப்பேச்சோ, என்ன இன்பப்பேச்சோ, மணிக்கணக்கில் பேசுகிறுன், மலர் இங்கே வாடுகிறது, மணம் மாய்கிறது, அவன் அங்கே நள்ளிரவு நேரத்திலும் நண்பனுடன் பேசிக் களிக்கிருன்! என் செய்வாள் ஆன், ஏங்கினுள்! அழுதாள்

காண்டி பிரபுவின் பகையைப் போக்கிச் சமரசம் உண்டாக்க, மேரி, ரிஷ்லுவை அனுப்பிவைத்தாள். ரிஷ்லுதான், முன்பே காண்டி பிரபுவுக்கு அன்பு ததும்பும் கடிதம் அனுப்பினவனுயிற்றே—எனவே, காண்டியிடம், பேசிச் சரிப்படுத்திவிட முடிந்தது. தனக்குச் சேவை செய்வதையே கொள்கையாகக் கொண்டவன் இந்த ரிஷ்லு, எனவே இவன் பேசுவதை நம்பலாம், என்று எண்ணினுன். ரிஷ்லுவும், "எதிர் காலம், சிறப்புடன் விளங்கும்! தங்களின் ஆற்றலை எதிர்த்து நிற்க வல்லவர் யார்? மேரி என்ன இருந்தாலும் பெண்! கான்சினியோ, களியாட்டத்தில் மூழ்கிக் கிடப்பவன்! மன்னனே, விளையாட்டுச் சிறுவன்!" என்று பலப்பல கூறி மயக்கக் கூடியவன்தானே! என்ன நோக்கம்? காண்டிபிரபுவுக்கு அதிகாரம் கிடைக்க வேண்டும் என்பதா! செச்சே! அதற்கா இவ்வளவு பாடு! மேரி அம்மை உணரவேண்டும், நீண்ட நாள் பகையை, பிடிவாதத்தை, முரட்டுத்தனத்தை எவ்வளவு திறம்பட ரிஷ்லு முறித்துவிட்டான், இவனன்றே இனி நமக்குத் துணையாக இருக்கவேண்டும், இவனிருக்க நாம் கான்சினியை நம்பிக் கிடக்கிறேமே, என்றெல்லாம் எண்ணிக் கொள்ள வேண்டும்! இதற்காகவே ரிஷ்லு, சமரசம் ஏற்படுத்திவைத்தான்—கபடம் அறியாத காண்டிபிரபு, பாரிஸ் வந்தான், அரண்மனை நுழைந்தான், அடையவேண்டிய பெரும் பேறு கிடைத்துவிட்டது என்று எண்ணிக் களிப்புற்ருன்.

காண்டியின் கோலாகலம் வேகமாகத் துவங்கி, வெறிபோல வளர்ந்தது. யாரையும் சட்டை செய்யாத போக்கு! எவரையும் எதிர்த்துத் தள்ளும் முறை! எவர் என்னை என்ன செய்யமுடியும் என்ற இறுமாப்பு! சிரித்துப் பேசுவோர், சிரம் அசைத்துக் கரம் நீட்டிடுவோர், புகழ் வீசி இலாபம் கேட்போர், இவர்கள் காண்டியின் பரிவாரம். பகலெல்லாம் விருந்து வைபவம்! இரவெல்லாம்? விவரம் கூற இயலுமா! காண்டியின் 'காட்டு முறை' பாரிஸ் அரண்மனை வாசிகளைக்கூடப் பயப்படச் செய்தது.

"மன்னனு! வெறும் பொம்மை! தூக்கிஎறிய எந்நேரம் பிடிக்கும்? அந்த அரியாசனத்தில் அமரத்தான் எவ்வளவு

நேரம் பிடிக்கும்? நான் விரும்பினுல், கான்சினி கடுகி ஓட வேண்டும், மேரி மடாலயம் சேரவேண்டும், மன்னன் சிற கொடிந்த பறவையாகவேண்டும்'' என்று கொக்கரிக்க லாஞன். உண்மையிலேயே, உயிருக்கு ஆபத்து வருமோ என்று அஞ்சிய கான்சினி, ஓடிவிடலாமா என்று கூட எண்ணினுன். மேரி திகில் கொண்டாள். ரிஷ்லு, அவள் பக்கம் நின்ருன், ''அஞ்சாதீர்! அட்டகாசம் செய்கிருன் காண்டி! பலம் இல்லே! துணே நிற்போர் யாவரும், துரத்தினுல் ஓடிவிடும் தொடைநடுங்கிகள்! பயம் கொள்ளாமல், விளேவு என்ன ஆகுமோ என்று யோசியாமல், உத்தர விடும், காண்டியைக் கைது செய்ய!'' என்று யோசனே கூறினுன். எந்தக் காண்டி பிரபுவிடம் தயவுகோரி இருந்தானே, எந்தப் பிரபுவை அரண்மனேக்கு அழைத்து வந்தானே, அவனிடம் துளி பரிவு காட்டினுஞ? இல்லே! ரிஷ்லுவுக்குக் காரியம்தான் முக்கியம், பண்புகளல்ல!

காண்டி கைது செய்யப்பட்டான்; பாஸ்ட்டிலி சிறை புகுந்தான்.

காட்டுத்தீ போலக் கிளம்பிய அவனுடைய அட்டகாசம், நொடியில் அழிக்கப்பட்டுவிட்டது.

துணே நின்ருேர்கள் விரண்டோடினர்—துதிபாடகர்கள், மன்னிப்புக் கோரினர்.

ரிஷ்லுவுக்கு இலாபம் உண்டா? இல்லாமற்போகுமா? ஒவ்வொரு அரசியல் குழப்பமும், ரிஷ்லுவுக்கு இலாபமாகத்தான் முடிந்தது. தர்மாதிகாரியாக அரண்மனே நுழைந்த ரிஷ்லுவுக்கு ஆட்சி மன்றச் செயலாளர் பதவி கிடைத்தது. உறுமீனல்ல, பெருமீன்! இரை கிடைத்த இன்பத்திலே மூழ்கி விடாமல், மேலும் இரை தேடலாஞன் ரிஷ்லு.

காண்டிபோலவே, எதிர்ப்புணர்ச்சி கொண்டிருந்த வேறு பிரபுக்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்தான் — வெளி நாடுகளுக்குத் தூதுவர்களே அனுப்பிப் பிரன்ச்சுநாட்டுக்கு ஆதரவு திரட்டிடச் செய்தான்-ரிஷ்லு தன் காரியத்தைத் திறம்படத் துவக்கினுன்.

ஆட்சிக் குழுவிலே வேறு பலர், அமைச்சர்கள், செயலாளர்கள் உண்டு, எனினும், ரஷ்லு தன் திறத்தாலும் முறையாலும் மற்றவர்களேச் சாமான்யர்களாக்கிவிட்டு, முன்னணி அமர்ந்தான். முதலமைச்சர் என்ற பட்டம் அளிக்கப்படவில்லே, ஆனல் எதிர்காலத்தில் ரிஷ்லுதான் அந்தப் பதவியில் அமரப்போகிருன் என்பது குறிப்பாகத் தெரியலாயிற்று. பயணம், நம்பிக்கையுடன் தொடங்கப்பட்டது; பாதையும் தெளிவாகிவிட்டது, ஆனல் இடையே ஓர் புயல் விசி, பாதையை மறைத்தது, பயணத்தைத் தடுத்தது.

காண்டி சிறைப்பட்டான், கான்சினியின் வெறியாட்டம் உச்சநிலே அடைந்தது. மன்னனே மதிப்பதில்லே, ஏளனம் செய்வான், அரியாசனத்தில் அமர்ந்து கொள்வான், அரசனுக்குச் செலவுத்தொகைதர அனுமதியேன் என்று ஆர்ப்பரிப்பான். ஒரு சாதாரண பிரபு குடும்பத்தானுக்குக் காட்டுமளவுக்குக்கூட, மன்னனுக்கு மரியாதை காட்டமாட்டான். பித்தம் முற்றிவிட்டது—முடிவு நெருங்கி விட்டது. லேனிஸ், இந்த முடிவுக்கான திட்டம் தீட்டி விட்டான். ஒருவரும் அறியாவண்ணம் தீட்டப்பட்ட திட்டத்தின்படி, மன்னன் உத்தரவு பெற்ற ஒரு பிரபு, கான்சினியைக் கைதுசெய்தான் — எதிர்த்ததைச் சாக்காகக் கொண்டு கான்சினியைச் சுட்டுக் கொன்றுவிட்டான்! முகம் சுக்கு நூருகிவிட்டது. ஆணவமும் அட்டகாசமும் அழிந்தது என்று மகிழ்ந்தனர் பலரும். கான்சினியின் கையாட்கள், இந்த எதிர்பாராத தாக்குதலாலும், விபரீதமான முடிவுகண்டதும் திகைத்துப் போயினர்—தப்பினுல் போதும் என்று திக்குக்கொருவராக ஓடிவிட்டனர். ஒரு விநாடிக்கு முன்பு வரை, அவன் இட்டதுதான் சட்டம் என்ற நிலே இருந்தது, சுட்டுத் தள்ளப்பட்டான், ஏன் என்று கேட்க ஆள் எழவில்லே. வாழ்க மன்னன்! என்ற முழக்கமிட்டபடி, கான்சினியைக் கொன்ற பிரபு, மக்கள் முன், பிணத்தைப் போட்டான், மக்கள், தொலேந்தான் தூர்த்தன்! என்று மகிழ்ந்து கூறினர். கலக்கமடைந்தாள் மேரி—கான்சினிக்கு நேரிட்ட கதிகண்டு அல்ல, தனக்கு என்ன ஆபத்து வர இருக்கிறதோ என்று எண்ணி, ஆண்டு பலவாக அவனுடைய சொல்கேட்டு ஆடிவந்த மேரி, அரண்மனேயில் அளவுகடந்த அதிகாரத்தை அவனுக்கு அளித்த மேரி, வெறி நாயைச் சுட்டுத்தள்ளுவது போல அவனேச் சுட்டுத்தள்ளியது கேட்டு, இந்த அக்ரமம் ஆகுமா? என்று கேட்கவில்லே—கதறக்கூட இல்லே. தன்னேக் காத்துக் கொள்வது எப்படி, கான்சினிமீது பாய்ந்த பகை, தன்னேத் தாக்கினுல் எப்படித் தாங்குவது, என்று தான் எண்ணம் சென்றது! பிரஞ்சு அரச குடும்பத்தில் இப்படிப்பட்ட நெஞ்சினருக்கே இடம் இருந்தது!

கான்சினியின் மனேவியின் பெயர் லியனேரா. மேரிக்கு இவள் உயிர்த் தோழி. மேரியின் செவிலித்தாயின் மகள், கான்சினி இறந்துவிட்டதை எப்படி லியனேராவிடம் கூறுவது—அவள் மனம் என்ன பாடுபடும், என்று கூறிக் கரத்தைப் பிசைந்துகொண்டு கண்ணீர் உகுத்தனர், சேடியர். மேரிக்குக் கோபம் பிறந்ததாம், ''அவன் எப்படிச் செத்தான் என்பதைச் சொல்லத் தெரியாவிட்டால், அது பற்றி அவளிடம் பாடுங்கள்'' என்று அலட்சியமாகக் கூறிவிட்டுத் தன் காரியத்தைக் கவனித்தார்களாம்.

எப்படிப்பட்ட உத்தமமான மனம்! எவ்வளவு உயர்ந்த பண்பு!

கான்சினி கொல்லப்பட்டதும், மன்னன், தன் தோழன் லேனசுடன் கூடிக்கொண்டு, புதிய பல ஏற்பாடுகள் செய்யலாஞன். புயல் வீசலாயிற்று! கான்சினியின் தயவால் பெரும் பதவிகளில் அமர்ந்திருந்தவர்கள், வேலேயினின்றும் நீக்கப்பட்டனர். கான்சினியால் சிறை வைக்கப்பட்டவர்கள், விடுதலே செய்யப்பட்டு, பதவிகளில் அமர்த்தப்பட்டனர். பல துறைகளிலே திடீர் மாறுதல். லியனேரா சிறையில் தள்ளப்பட்டாள். மேரியின் அமுல் அடக்கப்பட்டுவிட்டது. எல்லாம் இப்போது லேனஸ் கரத்தில்!

மன்னனே மக்கள் பாராட்டினர். ஏதுமறியாதவர் போலிருந்தாரே, இப்போது இவ்வளவு ஆற்றலுடன் காரியமாற்றுகிருரே, என்று கூறி மக்கள் மகிழ்ந்தனர். கான்சினியிடம் மக்களுக்கு அவ்வளவு வெறுப்பு. இவனது கொட்டத்தை அடக்கும் துணிவு யாருக்குமா இல்லே, என்று மக்கள் பலகாலமாகக் கேட்டுவந்தனர். வேட்டை விளேயாட்டில் ஈடுபட்டு, ஆட்சியிலே இருப்பவர்கள் எது செய்தாலும் அக்கரைகாட்டாது இருந்து வந்த இந்த ஊமை மன்னன், மக்களின் மனப்போக்கை அறிந்து, மாபாவியைக் கொன்ருனே, இதல்லவா ஆச்சரியம் என்று பேசினர்.

கான்சினியின் பிணம் பிய்த்தெறியப்பட்டது. ஆளுக்கொரு துண்டு எடுத்து அங்கும் இங்கும் போட்டுக் கொளுத்தினர்—சாம்பலே, காற்ருேடு கலந்தனர், களிநடம் புரிந்தனர். கான்சினி ஒழிந்தான், மன்னன் வாழ்க! இத்தாலிய எத்தன் ஒழிந்தான், வீர இளேஞன் வாழ்க! என்று வாழ்த்தினர்.

கான்சினியுடன் தொடர்பு கொண்டோர், மேரியின் தயவுக்குப் பாத்திரமானேர், இவர்களுக்குப் பேராபத்து தாக்கியபோது, தப்பிப்பிழைத்தது, ரிஷ்லு மட்டுந்தான்! எப்படி?

கான்சினியின் தயவைப்பெற ரிஷ்லு தவறவில்லே—மேரியின் ஆதரவால்தான், ஆட்சிக்குழுச் செயலாளராக அமர்ந்திருந்தான். எனவே மன்னனுக்கும் லேனசுக்கும் மாற்றுக் குழுவிலே இருந்த ரிஷ்லு, ஒழித்துக் கட்டப்படவேண்டிய புள்ளிதான், எனினும், லேனஸ், மன்னனிடம் ''ரிஷ்லு யோக்யர்! தங்களிடம் நிரம்பப் பற்று

உள்ளவர்'' என்று வாதாடினான். ஏன்? அவன் அவ்விதம் நம்பும்படி ரிஷ்லு, சிலகாலமாக, நடந்துகொண்டு வந்தான்.

கான்சினியின் நிலை, திடீரென்று சாயும் என்பதையும், லைனஸ் மன்னனைப் பயன்படுத்தி, சூத்திரக் கயற்றினைப் பிடித்துக்கொள்ளப் போகிறான் என்பதையும், உணர்ந்த ரிஷ்லு, "கான்சினியின் போக்கே எனக்குப் பிடிக்கவில்லை, எனக்கு அவன் தயவில் பதவியில் இருக்கவே கஷ்டமாக இருக்கிறது, மேரி அம்மையின் இயல்பும் எனக்குப் பிடிக்கவில்லை, என் உள்ளம், மன்னன் சார்பாகத்தான், மன்னனிடம்தான் அதிகாரம் இருக்கவேண்டும் என்பது என் நோக்கம்'' என்றெல்லாம், லைனசிடம், அவன் நம்பும்படி பேசி வந்திருக்கிறான். எனவேதான், பலருக்குத் தலைபோன அந்த நேரத்திலும், ரிஷ்லு, சேதமின்றி இருக்க முடிந்தது.

மேரியும் கான்சினியும் அல்லவா, நமது இன்றைய உயர்வுக்குக் காரணம், அவர்களிடம் உள்ளன்பு கொள்வதும், நன்றியறிதல் காட்டுவதுந் தானே, நமது கடமை, அவர்களில் கான்சினி கொல்லப்பட்டு விட்டான், மேரியோ தாழ் நிலைக்குத் தள்ளப்படுகிறாள், அவர்கள் சார்பிலே நின்று, லைனசின் அக்ரமத்தைக் கண்டிப்பதல்லவா அறம், என்றெல்லாம் ரிஷ்லு எண்ணவில்லை. மூவர் இருந்தனர், முட்டுக் கட்டைகள் — ஒருவன் காண்டி; சிறை சென்றான்; மற்றொருவன், கான்சினி, சுட்டுச் சாம்பலாக்கி விட்டனர்- மூன்றாமவன் இந்த லைனஸ், இவன் தொலையுமட்டும், துதிபாடித் தப்பித்திருக்கத்தான்வேண்டும் — இவனும் தொலைவான், பிறகு, நான்தானே மன்னன் பக்கத்தில், என் கரத்தில்தானே பிரான்சு!—என்று இப்படி எண்ணினான் ரிஷ்லு. அவன் படித்த மார்க்க ஏடுகளும் அறநூற்களும் இத்தகைய சுயநலத்தைத்தானா தந்தன, என்று கேட்கத் தோன்றும். அந்த ஏடுகளிலே இருந்து ரிஷ்லு இந்தக் குணத்தைப் பெற்றானோ இல்லையோ, நாமறியோம். ஆனால் ஒன்று அறிவோம் அவன் அந்த ஏடுகளைப் படித்ததே கூட, சொந்த ஆதிக்கத்தைப் பெற அவை தரும் அறிவு பயன்படட்டும் என்ற நோக்குடன்தான்! அறநூல் படித்தவன்! அபாரமான திறமைசாலி! – என்று புகழப்பட வேண்டும் என்பதற்காகக் கற்றானே தவிர, அறத்தைப் பரப்பவேண்டும், காக்கவேண்டும் என்பதற்காக அல்ல! அந்த வேலையைப் புத்தகப் பூச்சிகளுக்கும் வித்தகப் பேச்சாளருக்கும் விட்டு விட்டான்!



அரண்மனை ஆச்சரியப்பட்டது பலரை வீழ்த்திய பெரும் புயலால், ரிஷ்லு சாய்ந்திடாதது கண்டு.

மேரியிடமிருந்து அதிகாரம் பறிக்கப்பட்டதுடன் அம்மையைப் பாரிசை விட்டே பயணப்படும்படி மன்னன் உத்தரவிட்டான் —உத்தரவு பிறப்பிக்கும்படி லைனஸ் கட்டளையிட்டான்!

ப்ளாயிஸ் என்ற ஊர் சென்று தங்க ஏற்பாடு செய்யப்பட்டு மேரி புறப்பட்டபோது, மன்னனுடைய அனுமதியுடன், ரிஷ்லு, மேரியின் ஆலோசகர் குழுத் தலைவராகச் சென்றான்.

மேரி, சுகத்திலும் துக்கத்திலும் வாழ்விலும் தாழ்விலும் தன்னுடன் இணைந்து இருக்க இசையும் ரிஷ்லுவின் பெருங் குணத்தைப் பாராட்டி இருக்கக் கூடும். ஆனால் ரிஷ்லு சென்றது, மேரி அம்மையுடன் இருந்துகொண்டு, மன்னனுக்கு அவ்வப்போது 'சேதி' அனுப்ப! லைனசின் ஏற்பாட்டின்படி ஆட்சிப் பொறுப்பை

மன்னன் ஏற்றுக்கொண்ட கணமே, ரிஷ்லு, மன்னனின் 'ஆள்' ஆகிவிட்டான். மேரி இனி ஒரு கருவி — அதிலும் கூர் மழுங்கிவிட்டது! உயர வழி, முன்னேற மார்க்கம் மீண்டும் உயர் பதவி பெற வழி, மன்னனுக்குத் தொண்டு புரிவதுதான் என்ற முடிவுக்கு ரிஷ்லு வந்தாகிவிட்டது. மன்னனால் நியமிக்கப்பட்ட 'ஒற்றன்' இந்த ரிஷ்லு என்பதறியாமல், இழந்ததைத் திருப்பிப்பெறத் திட்டம் என்ன வகுக்கலாம் என்று எண்ணியபடி, ரிஷ்லுவை அழைத்துக்கொண்டு, மேரி, ப்ளாயிஸ் சென்று புது முகாம் அமைத்துக்கொண்டாள்.

மேரியுடன் ரிஷ்லு இருந்து வந்தது லைனசுக்குப் பிடிக்கவில்லை. எனவே ரிஷ்லு, பழையபடி லூகான் நகர் அனுப்பப்பட்டான். ஏழாண்டுகள் இதுபோல, 'வனவாசம்' செய்ய நேரிட்டது. பலர் ரிஷ்லுவின் அரசியல் வாழ்வு இனித்துலங்காது என்று எண்ணினர், ஆனால்ரிஷ்லுவுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கைஇருந்தது மீண்டும் பதவிகிடைத்தே தீரும், முன்னிலும் மேலான நிலை பிறக்கும் என்று.

'நான் உண்டு என் ஏடு உண்டு' என்று ரிஷ்லு கூறிக் கொண்ட போதிலும், நாட்டு நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்த வண்ணம்தான் இருந்தான். இடையிடையே, எந்த மன்னனால் துரத்தப்பட்டானோ, அதே லூயி மன்னனுக்கு, ரிஷ்லு தன் ஆற்றலை விளக்கிக்காட்டும் வாய்ப்பும் கிடைத்தது.

(தொடரும்)

---

# பகுத்தறிவுச் சுடர்

[ உடுமலையான் ]

"உங்களுடைய தத்துவம் எனக்குப் புரியவில்லையே" என்றாராம் பேட்டி காணவந்தவர்.

"அப்படியா? புரியவைக்கிறேன். அழகான யுவதியோடு இரண்டு மணிநேரம் உட்கார்ந்து பேசிக் கொண்டே இருந்தால் இரண்டு நிமிஷ நேரம் கடந்தமாதிரி இருக்கும். சூடான 'ஸ்டவ்'மீது இரண்டு நிமிஷநேரம் உட்கார்ந்திருந்தால், அதுவே இரண்டு மணி நேரம் கடந்தமாதிரி இருக்கும். அதுதான் என்னுடைய தத்துவம்" என்றாராம் அந்த மேதை.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு நீங்கள்சொல்லுகிறயோசனை என்ன என்று இன்னொரு சமயம் ஒருவர் கேட்டபோது, வெற்றி என்பது, 'உழைப்பு, விளையாட்டு, வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருப்பது ஆகிய மூன்றும் சேர்ந்தால் கிடைத்துவிடும்' என்று வெற்றிவழி சொன்னதும் அவரே தான்.

'இரண்டாவது மகாயுத்தத்தில் அணு குண்டு உபயோகிக்கப்பட்டது. மூன்றாவது யுத்தத்தில் நீர் வாயு குண்டு உபயோகிக்கப்படும். நான்காவது உலக யுத்தம் எப்படி இருக்கும்' என்று கேட்டபோது, "வெறும் வில்லும் அம்பும்தான் போர்க் கருவிகளாக இருக்கும்" என்றாராம் அதே மேதை.

அந்த மேதையை, பிறந்த நாட்டிலிருந்து ஓட ஓட விரட்டினார்கள் நாடாண்டவர்கள் சென்ற யுத்தத்தில்,

இவ்வளவுக்கும் அவர் செய்த தவறு, அவர் யூதராகப் பிறந்தது தான்.

அப்படி விரட்டப்பட்ட பேரறிஞர் ஐன்ஸ்டீன். இன்று உலக மகா விஞ்ஞானிகளில் தலைசிறந்தவராக விளங்கி மறைந்துவிட்டார். பிறந்த பொன்னாட்டை மறந்து, சொத்துச் சுகத்தையெல்லாம் அங்கேயே விட்டுவிட்டு, 'தலை தப்பினால் போதும்' என்று ஓடிவந்த அறிஞர் இந்தியாவில் வந்து குடியேறுவதற்கு வெகு ஆவலாக இருந்தார். ஆனால், சூழ்நிலைகள் அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்றன.

விஞ்ஞான ஆராய்ச்சியில் புகழ் கிடைப்பதென்பது,எப்பொழுதுமே ஏகோபித்த விதத்தில் இருக்காது. அபிப்பிராய பேதங்களும் அர்த்தமற்ற பொருமைகளும் இல்லாமல் இல்லை, கணித சாஸ்திரத்திலும் பௌதிகத் துறையிலும் ஏகோபித்த புகழைப் பெற்றிருப்பவர் ஐன்ஸ்டீன் ஒருவர்தான். 26 வயது இளைஞராக 'கிளார்க்' வேலையில் உட்கார்ந்துகொண்டு காகிதங்களையும் பென்சிலையும் வைத்து 'கிறுக்கி'க்கொண்டிருந்த பின்னர், 50 வருடங்கள் கழித்து உலகம் அவரை பெரும் விஞ்ஞானப் பேரறிஞன் என்று ஏற்றிப் போற்றிற்று.

இவருடைய 'ரிலேடிவிடி'க் கொள்கை, மற்ற விஞ்ஞானிகளைத் திகைக்கவைத்தது. ஆரம்பத்தில் தயங்கியவர்கள், நாளாக ஆக ஏற்றுக்கொண்டனர். உலகத்தை இயக்குகிற விதிகள், நீளம், அகலம், ஆழம் ஆகியவைதான் என்று நம்பி இருந்தனர். ஐன்ஸ்டீன் நான்காவது விதியும் உண்டு என்று நிரூபித்தார். அதுதான் காலம் என்பது என்று கூறத் தொடங்கினார். பெர்ன் சர்வ கலாசாலையில் பௌதிகப் பேராசிரியராக இருந்தபோது 1905ல் முதன் முதலில் இந்தத் தத்துவத்தை வெளியிட்டார். பூமியின் வேகத்தை நிர்ணயிப்பதில் இருந்த சில சிக்கல்களை நீக்குவதற்கு இது பயன்பட்டது. ஐன்ஸ்டீன் சொன்ன நாள்வரையில், பொருளும் சக்தியும் வெவ்வேறு விஷயங்கள், இரண்டில் எதையும் ஆக்கவோ அழிக்கவோ முடியாது என்று விஞ்ஞானிகள் நம்பியிருந்தனர். அது தவறு என்றார், ஐன்ஸ்டீன்.

எல்லாப் பொருளுமே சக்தியின் ரூபங்கள்தான்- பொருளைச் சக்தியாக மாற்ற முடியும். பொருளை அணுவாகப் பிரித்தால் அதிக சக்தியைக் காண முடியும் என்று சொல்லி அப்படியே நிரூபித்தார். பொருள், இடம், காலம், பூமியின் ஈர்ப்புத் திறன் ஆகியவற்றிற்கு உள்ள தொடர்புகளையும் வெளியிட்டார். இயற்கையின் ரகசியங்களைக் கண்டறிய இந்த உண்மைகள் விஞ்ஞானிகளுக்குப் பெரிதும் பயன்பட்டது.

1933ல் ஆய்வுச் சாலையில் ஐன்ஸ்டீன் செய்த பரிசோதனைகள் தான், 13 ஆண்டுகளுக்குப் பிறகு நாகசாகியிலும், ஹிரோஷிமாவிலும், அணுகுண்டாக வெடித்தது.

ஆனால் நல்ல காரியத்திற்குக் கண்டு பிடிக்கப்பட்ட சோதனைகள் நாசகாரியத்திற்குப் பயன்பட்டதை நினைத்து ஐன்ஸ்டீன் மனம் புழுங்கிக் கொண்டே இருந்தார்.

ஜெர்மனியில் அல்ம் என்ற இடத்தில் 1879 மார்ச் 14ம் நாள்

யூதப் பெற்றோர்களுக்கு மகனாகப் பிறந்தார்.

பள்ளிக்கூடத்தில் கண்டிப்பான விதிமுறைகளுக்குக் கட்டுப்படாமல், 'துள்ளித்திரிந்தார். குறுக்குக் கேள்விகளைக் கேட்டு ஆசிரியர்களைத் திணற அடித்தார். பள்ளிப் படிப்பை விட்டுவிட்டு, 'கிளார்க்'காகி, தன் 'ரிலடிவிடிக் கொள்கையை வெளியிட்டார். 1905 ஜுரிச் சர்வகலாசாலையில் டாக்டர் பட்டம் தரப்பட்டது. ஆஸ்டிரியாவில் ஸால்ஸ்பர்க் என்ற இடத்தில் கூடிய விஞ்ஞானப் பேரவையின் முன்னர் 1905ல் வாசித்துக் காட்டிய பிறகுதான் இவரது தத்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்டது-

1911-12-ல் பிரேக்நகரில் பௌதிகப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். 1921-ல் நோபல்பரிசு கிடைத்தது. வைமூர் குடியரசாட்சிக் காலத்தில் இவரது புகழ் உச்ச நிலைக்குச் சென்று ஒளி வீசிற்று 1933-ல் நாஜிகளின் யூத எதிர்ப்புக் கொள்கைப்படி, இவர் ஜெர்மனியிலிருந்து ஓடவேண்டியதாற்று. இவரை உயிரோடு பிடித்துத் தருபவர்களுக்கு பெருந்தொகை பரிசாக அளிக்கப்படும் என்றும் சர்க்கார் அறிவித்தது. ஜெர்மனியிலிருந்து பிரான்சு, பெல்ஜியம், இங்கிலாந்து முதலிய இடங்களுக்கு அலைந்து கொண்டிருந்தார். 1933-ல் பிரின்ஸ்டன் கழகத்திற்குச் சென்று பேராசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு 1940-ல் அமெரிக்கப் பிரஜையாக மாறினார்.

ஐன்ஸ்டீன் மனித இனத்தின் மீது மட்டற்ற ஆசையும் மதிப்பும் வைத்திருந்தார். மேதையானாலும் சாதாரண மனிதராகவே தன்னைப் பாவித்துக்கொண்டு வாழ்ந்து காட்டினார். தன் சாதனைகளைப் பற்றி ஒரு சமயம், 'என் சாதனைகள் மிகைப்படுத்திச் சொல்லப்படுகின்றன. விஞ்ஞான ரகசியங்கள் வெகு அழகு நிரம்பியவை. வாழ்நாள் முழுவதும் விஞ்ஞானத்திலேயே மூழ்கித் திளைப்பதற்கு சந்தர்ப்பம் இருந்தாலே போதும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தனிமனித சுதந்தரத்தைப்பற்றி அசையாத நம்பிக்கை அவருக்கு உண்டு. 'அரசியல் சுதந்தரமும் சமுதாய சமத்துவமும் சகிப்புத் தன்மையும் எல்லோருக்கும் தங்கு தடையின்றிக் கிடைக்க வேண்டும் என்ற விதி இருக்கும் நாட்டில் தான் நான் தங்கவிரும்புகிறேன்' என்று சொல்லியிருக்கிறார். மனித அறிவுக்கு எட்டாத விஞ்ஞான ரகசியங்களையும், இயற்கைச் சக்தியின் இருளடைந்த பாகங்களையும் கண்டுபிடிக்கவேண்டும், அவற்றை வாழ்வின் வளத்திற்கும் மனித நலனுக்கும் பயன்படுத்த வேண்டும் என்ற துடிப்பும் ஆர்வமும் ஐன்ஸ்டீனிடம் அளவில்லாமல் இருந்தது.

காந்தியடிகளைப்போல் சமரசவாதியும் சமாதானப் பிரியருமான ஐன்ஸ்டீன், அணுகுண்டின் மூலகர்த்தாவாக விளங்கியது விசித்திரம்தான். 1939 ஆகஸ்டில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டுக்கு இவர் எழுதிய கடிதம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. அணுகுண்டு செய்யும் அளவுக்கு அணு ஆராய்ச்சி முன்னேறிவிட்டதெனவும், ஜெர்மனி சீக்கிரத்தில் இந்தத் துறையில் வெற்றிகண்டுவிடும் எனவும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அதைக் கண்டபிறகே ரூஸ்வெல்ட் முழு மூச்சோடு அமெரிக்க விஞ்ஞானிகளின் உழைப்பைக்கொண்டு அணுகுண்டைத் தயாரித்தார். தன் இந்த நடவடிக்கைக்காக சாகும்வரை ஐன்ஸ்டீன் வருத்தப்பட்டார். ஆக்க வேலைக்கு உபயோகப்படுத்துவதை அழிவு வேலைக்கு உபயோகப்படுத்தி நாசமாகிறார்களே என்று நெஞ்சு கொதித்தது. இனி நீர்வாயு குண்டு வந்தால் நாகரிகம் என்ன ஆகுமோ என்றும் அஞ்சினார்.

சிந்தனை தேங்கிய கண்கள், கூர்த்த மதியை நினைவுபடுத்தும் கூர்மையான மூக்கு, அறிவின் விலாசத்தை அறிவிக்கும் அகன்ற நெற்றியும்கொண்ட இந்த விஞ்ஞானி ஒரு ஞானியைப்போலவே வாழ்ந்தவர். தனிமையில் விருப்பம் அதிகம் இவருக்கு. அதே போல ஞாபக மறதியும் அதிகம் இவருக்கு.

ஒரு சமயம் ஆயிரத்து ஐநூறு டாலர் 'செக்' ஒன்றை புத்தகப் பக்கங்களுக்கு அடையாளக் காகிதமாக வைத்துவிட்டார். பிறகு அந்தப் புத்தகமே காணமல் போய்விட்டது. உடம்பு தேய்த்துக் குளிப்பதற்கும் க்ஷவரத்திற்கும் ஒரே சோப்பை உபயோகிக்கும் இவருக்கு, சங்கீதம் என்றால் வெகுபிரியமாம். வாசித்துக் கொண்டே நாட்கணக்கில் உட்கார்ந்து விடுவாராம், இவர் இருதடவை திருமணம் செய்து கொண்டிருக்கிறார். 1901ல் மிலிவா மாரே என்கிற யுவதியை மணம் செய்துகொண்டார். இரண்டு ஆண் குழந்தைகள் அவள் மூலமாக உண்டு. 1916ல் விவாகரத்து ஏற்பட்டு அத்தை மகள் எல்சாவை இரண்டாந்தாரமாக ஏற்றுக் கொண்டார். அவளும் 1930 இறந்துவிட்டாள்.

'உலகத்தை உருவாக்கிய எண்மரில் இவரும் ஒருவர்' என்று பெர்னார்ட்ஷா ஐன்ஸ்டீனைப் புகழ்ந்திருக்கிறார். மற்ற எழுவரும் அரிஸ்டாட்டல் பிதகோரஸ், டாலமி, கோபர்னிகஸ், கலீலியோ, கெப்ளர், நியூடன் ஆகியோராகும். ஐன்ஸ்டீன் நல்ல எழுத்தாளர். பல அருமையான புத்தகங்களை எழுதியிருக்கிறார். சகிப்புத்தன்மையும் சமாதான உணர்ச்சியுமே இவரது வாழ்விலும் எழுத்திலும் ஊடுருவி நின்றன.

'விஞ்ஞானியாக மாறுவேடம் பூண்டு வந்திருக்கும் பெரிய ஞானி' என்று ஒரு அறிஞர், இந்தமேதையைப் புகழ்ந்தாராம். தன் இறுதி நாள்வரை பிரின்ஸ்டனில ஆரவாரமில்லாத அமைதியான வாழ்வில் இன்பம் கண்டு, மறக்கவோ மறுக்கவோ முடியாத அழியாத தத்துவத்தைத் தந்துவிட்டு மறைந்துவிட்டார். சரித்திரத்தின் பொன்னேடுகளில், அழியாத விதத்தில் அவர் பெயர் பதிந்துவிட்டது.

மனிதனின் ஜீவாதார உரிமைகளைப் பாதிக்கும் சகல சக்திகளையும் நிர்த்தாட்சண்யமாகத் தாக்கியவர், ஐன்ஸ்டீன்.

"எல்லா மக்களிடையேயும் ஒற்றுமை உணர்ச்சியாக வியாபித்திருக்கிற கடவுளைத்தான் நான் நம்புகிறேன். மனிதனுடைய நடவடிக்கைகளையும் முடிவுகளையும்பற்றிக் கவலைப்படுகிற கடவுளிடம் எனக்கு நம்பிக்கை இல்லை. கடவுட் கொள்கை, மதம் ஆகியவற்றின் சாரமே அன்பும் அறிவும்தான்"

என்று சொன்ன பகுத்தறிவுச் சுடர், அண்மையில் மறைந்துவிட்டது, உலகத்திற்கே ஈடுசெய்யமுடியாத நஷ்டம் என்பதில் சந்தேகமில்லை. எதையும் காரண காரியத்தோடு ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று வலியுறுத்தும் நமக்கு, பேரறிஞர் ஐன்ஸ்டீன் ஒரு கலங்கரை விளக்காகத் திகழ்கிறார் என்றால் மிகையாகாது. ★

4-பக்கத் தொடர்ச்சி

முதல் சிரத்தை காட்டிவந்தது. சிக்கினுர் இந்தியப் பிரதமர் பண்டிதர்! இப்போது, தன்னைப்போலவே பாகிஸ்தான் பிரதமரையும் மதிப்பதையும், பாகிஸ்தானைக்காட்டித்தன்னை மிரட்ட எண்ணுவதையும் உணர்ந்ததால், கொஞ்சம் விழித்துக்கொண்டார். பிணைப்பை அறுத்துக்கொள்ள அச்சமிருப்பதால், 'அமெரிக்க வழியும் வேண்டாம்! ருஷ்யவழியும் வேண்டாம்!! இந்திய மாடலில் எதையும் செய்யப்போகிறேன்,' என்கிருர்.

அது ஒருபுறம் கிடக்க, காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெறும் ஒவ்வொரு நாடுகளிலும் தன்னுடைய பாதத்தைப் பதித்துக்கொள்ள அமெரிக்கா காட்டிடும் ஆவல்— அதிகம்! அந்த நாடுகளைத் தன்வலையில் போட்டு, தன்னுடைய 'மார்க்கட்'டாக ஆக்கிக்கொள்ளச் செய்யும் தந்திரங்களும் அதிகம்!! அதன் ஒரு சின்னம்தான், அமைதியிலாத வியட்நாம்.

அமெரிக்காவின் துரதிர்ஷ்டமோ என்னவோ, அது அடியெடுத்து வைக்கும் இடமெல்லாம், புயலும் சிக்கலும்தான்! முதலாளித்துவத்துக்கு முன்னேடும் பிள்ளைகளிருக்கும் பூமிகளில் எப்படி அமைதி ஏற்பட இயலும்? பாகிஸ்தானின், நிலையும் இதுதான்! இப்படிப்பட்டவேதனைகளை ஒருபக்கம் வளர்த்துக்கொண்டு, அதே நேரத்தில் அணுசக்தியின் பெருமையை உணர்த்தக் கப்பலும் கட்டப்போகிருராம்— ஐசன். முயற்சி, நல்லதுதான்! ஆனுல், மன ஆழத்தில் கிடப்பது, நல்ல எண்ணம் அல்லவே!!

ஏழை எளிய நாடுகளிலிருப்போரின் வாழ்க்கையைக் கைதூக்கிவிடவேண்டுமென்னும் உள்ளத் தூய்மையில்லாமல், எத்தனை கப்பல் கட்டினுலும், பவனிவரச் செய்தாலும்—அது ஒரு விளம்பர வெளிச்சம் ஆகுமேயொழிய ஒருபோதும் பயன்படாது! உணரவேண்டும், அமெரிக்கா!! ✯

---

திருவண்ணுமலை அரங்கசாமி (ரெட்டியார்)

**மறைவு**

நீதிக்கட்சியின் முன்னுள் தலைவர்களில் ஒருவரும், சிறந்த குணவானுமான திருவண்ணுமலை திரு. M. B. அரங்கசாமி (ரெட்டியார்) அவர்கள் 26—4—55 அன்று இயற்கை எய்திய செய்தி அறிய மிகவும் வருந்துகிறேம். அன்னுருடைய மறைவு குறித்து 8–5–55 ஞாயிற்றுக்கிழமை அன்று அவருடைய கிராமம் தண்டராமபட்டில் இறுதி நினைவுநாள் கூட்டம் நடைபெறும் என்று அவரது மகனுர் தோழர் ஆர். நாகராஜன் அறிவிக்கிருர். மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கு நமது மனமார்ந்த அனுதாபங்கள்.

## அங்கே!

இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமாகுமுன்பே சோவியத் நாட்டில் எழுத்தறியாமை நீக்கப்பட்டுவிட்டது.

ஜாரிஸ்ட் ரஷ்யாவில் மொத்த ஜனத் தொகையில் 70 சதவிகிதத்தினர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாயிருந்தனர். சிற்சில தேசிய இனங்களில் இந்த விகிதாச்சாரம் இன்னும் கூட அதிகமாயிருந்தது. பல தேசிய இனங்கள் தமக்கென சொந்தமாக எழுத்து மொழி எதுவுமின்றி இருந்தன.

சோவியத் ஆட்சி ஏற்பட்ட ஆரம்ப நாட்கள் முதற்கொண்டே, அது எழுத்தறியாமை ஒழிப்பதற்கு பிரம்மாண்டமான வேலைகளை மேற்கொள்ளத் தொடங்கியது. இந்தப் பிரச்னை சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதற்கு ஒரு விசேஷ அரசாங்க கமிஷன் நியமிக்கப்பட்டது. சிறுவர், சிறுமிகளுக்கும் முதியவர்களுக்கும் கல்வி அளிப்பது குறித்து லெனின் பிறப்பித்தசட்டம்தான் இந்தப் பிரச்னை சம்பந்தமாக வெளியிடப்பட்ட முதலாவது அரசாங்க சாசனமாகும்.

கல்வி பயிலாதவர்களுக்கென பிரத்தியேகமான பாடபுத்தகங்களும் பயிற்சிகளும் பிரசுரிக்கப்பட்டன. வெகுஜன மக்களுக்கென எழுதப்பட்ட புத்தகங்கள் பெரும் பெரும் பதிப்புகளில் வெளியிடப்பட்டன. அறிவாளிப் பகுதியினர், உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த மேல்வகுப்பு மாணவர்கள், மாணவிகள், ஆபீஸ் சிப்பந்திகள் முதலியோர் அவர்களுடைய ஓய்வு நேரத்தில் லட்சக்கணக்கான மக்களுக்குக் கல்வி போதிக்க முற்பட்டனர். இந்த ஊழியர்களிடமிருந்து பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டனர். எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குக் கோஷ்டி கோஷ்டியாகவும் தனிப்பட்ட முறையிலும் கல்வி போதிக்கப்பட்டது. பள்ளிக்கூடங்களிலும் கலாச்சார கிளப்புகளிலும் நூல் நிலையங்களிலும் காரியாலயங்களிலும் வீடுகளிலும்நாடெங்கும்இயங்கத் தொடங்கிய ஏராளமான பள்ளிகளில் இம்மக்கள் பாடம் பயின்றனர். மாணவர் வசித்த இடங்களிலெல்லாம் இத்தகைய பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இரு வகையான பள்ளிக்கூடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஓராண்டு காலத்திற்குப்பயிற்சி அளித்த முதலாவது பள்ளியில் மாணவர்களுக்கு எழுதுவதற்கும் படிப்பதற்கும் கணிதக் கணக்குகள் போடுவதற்கும் கற்றுக் கொடுக்கப்பட்டது. இரண்டாவது வகையைச் சேர்ந்த பள்ளியில் பெரும்பாலும் ஓராண்டு காலப் பள்ளிப் படிப்பை முடித்தவர்ளே சேர்த்துக்கொள்ளப்பட்டனர்; சாதாரண நான்காண்டு கால ஆரம்பப் பள்ளியின் பாடத்திட்டங்கள் இப்பள்ளிகளில் இரண்டே ஆண்டுகளில் நடத்தி முடிக்கப்பட்டன.

சோவியத் ஆட்சி ஏற்பட்டபின் 40க்கு மேறபட்ட தேசிய இனங்கள் எழுத்து மொழிகளைப் பெற்றுக் கொண்டுள்ளன. இன்று இந்த இனங்களைச் சேர்ந்த மக்களும் சோவியத் நாட்டிலுள்ள இதர தேசிய இனத்தவர்கள் போலவே தம் தாய் மொழியின் வாயிலாகவே கல்வி பயிலுகின்றனர்.

மேற்கூறிய பல்வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதின் விளைவாக பிரதானமாக 1934ம் ஆண்டிற்குள்ளாகவே சோவியத் நாட்டில் எழுத்தறியாமை அடியோடு ஒழிக்கப்பட்டுவிட்டது.

---

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi St, Kancheepuram.